www.tamilarangam.net

# தூண்டில்

Tamilische Zeitschrift



உள்ளே....


* மறையாத மறுபாதி *
* கையறு நிலை *
* தமிழீழமே தீர்வு *
* என் உயிர்த் தோழனுக்கு *
* நீயே கதி *
* திரைப்பட விமர்சனம் *
* கள்ளர் கூட்டு *
* பிரேமபாசம் *
* அகதிகளை விரட்டும் சட்டங்கள் *
* குண்டுச


RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# என் உயிர்த் தோழனுக்கு !

சந்திக்கலாம் என்ற
நம்பிக்கையில் நான்
காத்திருக்கின்றேன் -
அதற்குள் நான்
தோற்றுவிட்டேன் என்று
நீ
முரசறிவிப்பது சரியல்ல.
நான் -
தற்போது
துவண்டுபோய் இருக்கின்றேன்.
துவண்டிருப்பது
தோல்வியல்லவே!
துவண்டுவிட்டேனேயொழிய
தொலைந்துவிடவில்லை.
என் போர் -
அவர்களுக்கான என் போர்
இன்னும் முடிவுக்கு வரவில்லை.
என்னைப் பொறுத்தவரையில்
இன்னமும் ஆரம்பமாகவே இல்லை.

இருட்டிய வாசல் வழியே
நின்று பாதை தேடும்
குருடனாய் நீ.
வெற்றுக் கோஷங்களுக்கு
குடை பிடித்து -
உன் சொந்தங்களை
அழிப்பதற்காய்
உன் கர்வம்
கர்வப்பட்டுக் கொண்டிருக்கிறது.

என் மனக் குகை திறந்து
என் பாதைகளை
நான் செப்பனிட்டுக்
கொள்கின்றேன்
நாளைய போரின்
ஆயத்தம் வேண்டி.

கண்களை இழந்த
குருட்டு வௌவால்களாய்
திசைதெரியாத திக்குகளில்
மனம் அலை பாய
தலைமைகளின்
தலைமைகளுக்குள்
சிக்குப்பட்டிருக்கும்
நிலை இல்லை இங்கே.

என்னை அறிந்து
என்னை உரித்து
என்னை இழந்து
என்னை மீட்க
நான் நடத்தும் வேள்வி.

இழப்புகளின் தொடர் புள்ளியில்
என் வாழ்க்கைச் சக்கரம்
சுழன்று கொண்டிருக்கும்.

என் மன விலங்கின்
நகக் கால்கள் தோண்டும்
என் நாளைய இருப்பை
உறுதி செய்தலுக்கான
போராட்டம் - ஆம்
அப்படிச் சொல்வேன்
இன்றும் - (இன்னும்)
உன்னை எதிர்க்கும் துணிவில்
நான் நிற்கிறேன்.
சந்திக்கலாம்
என்ற நம்பிக்கையில் நான்
இன்னமும் காத்திருக்கிறேன்
மானுட நேசிப்போடான
எனது
நாளைய வெற்றியை.

- வி.மைக்கல் கொலின் (ஈழம்) -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரேமபாசம்

## 58 எலும்புக் கூடுகள்...
## அரசியல் நடிகர்கள்...
## அண்ணனும், தம்பியும்...

தமிழீழப் போராட்டம் 'வீறு பெற்று' நடந்த 1984-85 காலகட்டங்களில் தமிழ்ப் பகுதியெங்கணும் ஒலித்தது 'தமிழீழத்தின் குரல்'. இலங்கை அரசுக்கு எதிராக, இடைமறிப்புகளுக்கு மத்தியில், இந்தியாவிலிருந்து புளொட்டினால் இது ஒலிபரப்பப்பட்டது. மக்கள் போராட்டம், தேசிய விடுதலை, தமிழீழம் என 'தமிழீழத்தின் குரல்' முழங்கியதெல்லாம் இன்னமும் எம் காதுகளில் ஒலிக்கின்றன. புளொட்டின் பலத்த தவறுகளுக்கு மத்தியிலும் அரசுக்கெதிரான முதல் ஒலிபரப்பு என்ற வகையில் பலராலும் பாராட்டுப் பெற்றதுடன், சிங்கள மக்களாலும் இது விரும்பிக் கேட்கப்பட்டது. இது அந்தக் காலம்!

இன்றோ புளொட்டினர் அரசின் இரண்டாவது செல்லப்பிள்ளைகள். மண்டைதீவு வானொலி நிலையத்தைத் தகர்த்து, அரசுக்கு எதிராக அன்று வானொலி நடத்தியவர்கள் இன்று அரசுடன் இணைந்து வவுனியாவில் வன்னிச் சேவை ஒலிபரப்பு நிலையத்தைத் திறந்து வைத்துள்ளனர். இது இன்றைய காலம்!!

இது ஒருபுறமிருக்க, இன்று இன்னுமொரு குரல் பிரதி சனி, ஞாயிறு, வியாழக் கிழமைகளில் இலங்கை, இந்தியா, மாலைதீவு நாடுகளில் உள்ள திக்கெட்டும் வானொலிப் பெட்டிகளுக்கு அருகில் உட்கார்ந்திருக்கும் தமிழ் நெஞ்சங்களுக்காக மாலை நேரங்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் ஒலிபரப்பாகின்றது. அதுதான் 'மக்கள் குரல்'.

அதர்மனின் சபையில், செல்லையா அண்ணன், பாட்டு வாத்தியார் பரமசிவம், மக்கள் குரற் செய்திகள், கடிதங்கள், இந்திய நட்சத்திரங்களின் பேட்டிகள், திரைப்படப் பாடல்கள் முதலான நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறுகின்றன. இவைதான் மக்கள் குரலின் 'புரட்சிகர' வேலைத் திட்டங்கள்.

கிண்டல் நிறைந்த நகைச்சுவையுடன் நடத்தப்படும் இந் நிகழ்ச்சி பொழுதைப் போக்குவதற்காக வானொலி கேட்பவர்களுக்கு நன்றாகவே உதவி செய்கிறது.

இந்தக் குரல் யாருடையது எனக் குறிப்பிட்ட சிலருக்கே தெரியும். ஒரு காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வின் இராணுவத் தளபதியாக இருந்தவரும், நாபாவுக்கு எதிரான உட்கட்சிப் போராட்டத்தில் முன்னணி வகித்தவரும், அதில் கிளம்பிய புரட்சிகர சக்திகளை தனது அதிகார நிலைப் படுத்தலுக்காகப் பயன்படுத்த முனைந்து தோல்வி கண்டவரும், இதில் எஞ்சிய சிறுகூட்டத்துக்குத் தலைவராகியவருமான டக்ளஸ் தேவானந்தாதான் இக் குரலின் உரிமையாளர்.

டக்ளஸின் 'அரசியல் ஆலோசகர்' ரமேசும், டக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளஸ் தலைமை தாங்கும் ஈ.பி.டி.பி.யினருமே இவ் வானொலிச் சேவையினை நடத்தி வருகின்றனர். இந்த ஒலிபரப்பில் அறிவிப்பாளராகக் கடமையாற்றுபவர் முன்பு புலிகளுக்கு ஆதரவாக பாடல் ஒலிபரப்பியதால் இடைநிறுத்தப்பட்ட கே.எஸ்.ராஜா. ஒரு சின்ன பல்டி அடித்திருக்கிறார். அவ்வளவுதான்!

சூளைமேட்டுச் சம்பவத்தால் கைதாகி, இந்தியாவில் சிறை வைக்கப்பட்ட டக்ளஸ் இந்தியாவுடன் முரண்பட்டு, ஒரு சிறிய குத்துக்கரணம் அடித்து, இலங்கை அரசுடன் ஐக்கிய முன்னணி அமைத்து, ஈ.பி.டி.பி.யாகத் தனது கட்சியைப் பதிவு செய்திருக்கிறார்

பிரதமர் டி.பி.விஜயதுங்கவைக் கூட ஒரு தள்ளுத் தள்ளி இடது பக்கம் விட்டுவிட்டு, பிரேமாவின் வலது பக்கத்தைப் பற்றிக் கொண்டுள்ளார் டக்ளஸ். அண்மையில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் மகாநாட்டில் 'தம்பி' என பிரேமாவினால் அன்பாக அழைக்கப்பட்ட பின் அண்ணன் மீதான டக்ளஸின் அன்புக்குச் சொல்லவா வேண்டும்?!

'அண்ணன் பிரேமாவின் ஆசிர்வாதத்துடன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் தம்பிக்கென வழங்கப்பட்ட சேவையினை சிறப்பாக நடத்திவருகிறார் சூரியதீபன் என்ற பெயரில் ஏரிக்கரைப் பத்திரிகையான தினகரனில் 'புல்லட் பொக்ஸ்' எழுதிவரும் ஈ.பி.டி.பி.யின் அரசியல் ஆலோசகர் றமேஸ்.

இவர்கள் புலிகளுக்கு எதிராகத் தாம் போராடுகிறோம் எனக் கூறிக் கொண்டு தமிழ் மக்களையும், அவர்களின் போராட்ட விழுமியங்களையும் அரசுடன் இணைந்து நசுக்கி வருகிறார்கள்.

சென்ற ஜனவரி 2இல் கிளாலிக் கடலேரியில் ஏராளமான அப்பாவிப் பொதுமக்கள் கடற்படையினரால் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டமை நாடு பூராவும் அறியப்பட்ட செய்தியாகும். கடற்படையினரால் வெளிச்சம் பாய்ச்சப்பட்டு, வந்தவர்கள் பொது மக்கள் என நன்கு அடையாளம் கண்ட பின்னரே, அவர்களிடமிருந்த பொருட்கள் கொள்ளையிடப்பட்டு, கொலை செய்யப்பட்டுள்ளனர். பெண்களின் காதுகளிலிருந்து தோடுகளைக் கழற்றி எடுக்க நேரம் எடுக்கும் என்பதால் காதுகளை அறுத்தார்கள் என்றும், உயிருடன் டீசலை ஊற்றி கொளுத்தினார்கள் என்றும் இக் கொடூரச் சம்பவத்தில் தப்பி வந்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் கூட கொல்லப் பட்டவர்களில் பொதுமக்க'ளும்' அடங்குவர் என அறிவித்துள்ளது.

ஆனால் 'மக்கள் குரல்' மட்டும், அன்று வந்தவர்கள் அனைவருமே புலிகள் என வாய் கூசாமல் கூறுகிறது. இந்தப் பொய்யில், அன்று கொல்லப்பட்டவர்களில் ஒருவரான ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்க ஆதரவான கிளிநொச்சி கல்வி அதிகாரி தர்மராஜாவையும் புலி என 'மக்கள் குரல்' பிரகடனப்படுத்தியுள்ளது

புலிகள் மக்களைக் கொல்கிறார்கள், அராஜகவாதிகள் என ஒப்பாரி வைக்கும் 'மக்கள் குரல்', அரசு ஊரடங்கு பிறப்பித்து குடியிருப்புகள் மீது சுப்பர் ஸொனிக்கால் குண்டு வீசி அழிப்பதை மட்டும் புரட்சிகர நடவடிக்கையாகப் பார்க்கிறது. யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் அனைவரும் புலிகளாகத் தெரிகின்றார்கள் என்றால், குண்டுவீசி யாழ்ப்பாணத்தை முற்றாக அழிக்கும்படி இவர்கள் ஏன் பகிரங்கமாக அறிவிக்கிறார்களில்லை என்பதற்கு ஒரு காரணம்தான் கூற முடியும். தமிழ் மக்களை முற்றாக அழித்துவிட்டால் ஈ.பி.டி.பி. எதற்கு? அதன் வானொலியான மக்கள் குரல் எதற்கு? என்று அண்ணன் பிரேமா தங்களை நாசமாக்கி விடுவாரோ என்ற பயமே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரபாகரன் தலைமையிலான புலிகள் ஜனநாயக மறுப்பை மேற்கொள்ளுகிறார்கள், அநியாயம் செய்கிறார்கள் என்பது யாரும் மறுக்க முடியாததே. ஆனால் கேள்வி என்னவென்றால் ஈ.பி.டி.பி. யினரும், இவர்களைப் போன்றவர்களும் தொங்கிக் கொண்டிருக்கும் பிரேமா என்ன ஜனநாயகக் காவலனோ? 50,000இற்கும் மேற்பட்ட மக்களின் சடலங்களின் மேல் சிம்மாசனம் ஏறியுள்ள பிரேமாவின் அடாவடித் தனங்களுக்கு இவர்கள் பூ வைத்துப் பூசை செய்வதை எப்படி மன்னிப்பது?

1990களில் இலங்கை இராணுவம்தீவுப் பகுதிகளை ஆக்கிரமித்தபோது, ஈ.பி.டி.பி.யுடன் உதவியுடன் கைதுசெய்யப்பட்ட 58 தமிழர்கள் பின்னர் மண்டைதீவுக் கிணறொன்றிலிருந்து எலும்புக்கூடுகளாகவே மீட்கப்பட்டனர். எனினும் காணாமற் போனவர்களின் பெற்றோர்கள் இன்றும் இராணுவ முகாம்களுக்கு கண்ணீருடன் ஏறி, இறங்கிய வண்ணம் உள்ளனர்.

ஐ.தே.க. மகாநாட்டிலும், இனவாத இயக்கமான 'சமாதி மன்றத்தினரின்' போதி பூசைகளிலும் கலந்துகொள்ளும் டக்ளஸிற்கு தமிழர்களைக் கடத்தி எலும்புக்கூடுகளாக்குவது கடினமானதா என்ன.

1989இல் புலிகள் அரசுடன் நடத்திய ஹனிமூன் வாழ்வில் தென்னிலங்கையின் ஐந்து நட்சத்திர சுகபோகங்களை அனுபவித்தார்கள் என்றால், எமக்கு மட்டும் இந்தச் சுகங்கள் கிடைக் கூடாதா என்று தங்கள் தொண்டர்களுக்கு டக்ளஸ் தலைமை விளக்கம் கொடுக்கிறது போலும்.

பிரிட்டன் முடி கொடுத்த காலம் முதல் இற்றைவரை பல்வேறு அரசியல் நடிகர்களை மக்கள் கண்டு கழித்துவிட்டனர். அந்த வரிசையில் இந்த டக்ளசும். நாளை இன்னும் யார் யார் வருகிறார்கள் என்று பார்ப்போம்.

- கணேசு

**அடுத்த இதழில் ....**

*சமர் :* ஹாண்டியின் சமரசமாகும்.
ஹாண்டியின் இருட்டடிப்பு.

*ஜேர்மனி :* பொலிஸ் நாஸிகள். 2

திரைப்பட விமர்சனம்

*ஜேர்மனி :* கொலைகார முட்டைகள்

*பிரான்ஸ் :* மொழி புரோக்கர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 80 களில்

# கலை, இலக்கியம்

*இக் கட்டுரை 1980இலிருந்து முனைப்புப் பெற்று வந்த ஈழத்துத் தமிழ் கலை, இலக்கியம் பற்றிய சில குறிப்புகளையே தருகிறது. இது பிரதானமாக தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான கலை, இலக்கியங்களையே சுட்டி நிற்கும். இனியும் பல ஆண்டுகள் கழிந்த பின்னரே திரும்பிப் பார்க்கின்றபோது, எது காலத்தில் நிலைத்தது, எது காலத்தில் அழிந்து போனது , அதன் பிரதான போக்கு என்ன? என்பன பற்றிக் குறித்தல் இயலும். அதனை இனிவரும் ஆய்வாளர்களுக்கு விட்டுவிட்டு, அவர்களுக்கான சில தகவல்களை இதில் பொறிக்கின்றேன். தகவல்கள் எனக்குத் தெரிந்த மட்டிலும், என் பார்வையிலும் வெளிப்படுகிறது என்பதனையும் குறித்துக் கொள்க!*

அரும்பி வருகிற காலம். தமிழ் இளைஞர்களில் மிகச் சிலபேர் துப்பாக்கி ஏந்தினார்கள். ஸ்ரீலங்காவின் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா, 1979 டிசம்பர் 31இற்கிடையில் "தமிழ்ப் பயங்கரவாதம்" ஒழிக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டார். "அமுக்கு, அமுக்கு. இன்னும் சற்றே அதிகம் அமுக்கு. அழுத்தம் அதிகரிக்கும்; வெடிப்பு நிகழும்" என்று தமிழ்க் கவிஞர் ஒருவர் பாடினார். மிகச் சிலபேர் தூக்கிய துப்பாக்கி மிகப் பலபேர் தூக்குவதற்கு ஏதுவாயிற்று.

அரசியல் பற்றிப் பேசுவதல்ல இக் கட்டுரையின் நோக்கம். ஆனால் அரசியலும், கலையிலக்கியமும் பிரிக்கப்பட முடியாதவை; பிரிக்கப்படக் கூடாதவை. இக் காலத்தில் முகிழ்த்து வருகின்ற கலை, இலக்கியம் பற்றியே இக் கட்டுரை பேசும்.

போராட்டப் பாதையில் ஒன்றாக ஆயுதம் எனத் தீர்மானிக்கிற போது, போராட்டத்திற்காக மக்களை அணிதிரட்டுகிற தேவை ஏற்படுகிறது. இதற்கு கலை, இலக்கியங்கள் முக்கிய வழிமுறையாகின்றன. வேறொரு வார்த்தையில் கூறுவதானால், அரசின் அடக்குமுறை பலரைக் கலைஞர்களாக உருவாக்கியது. ஒருபுறத்தில் விடுதலை அமைப்புகள் மக்களை வென்றெடுக்க கலை, இலக்கியங்களைப் பயன்படுத்துகின்றன. மறுபுறத்தில் கலைஞர்கள் உருவாக்கப்படுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கலை, இலக்கியம் பற்றிப் பேசுகின்றபோது ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு போக்கு முனைப்புப் பெற்றது. 50, 60களில் சாதி எதிர்ப்புப் போராட்டம் முனைப்புப் பெற்றது போல 70, 80களில் தமிழ் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான கலை, இலக்கியங்கள் அரும்பத் தொடங்கின. இவற்றில் கலாபூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும் 80களிலேயே படைப்புகள் படைக்கப்பட்டன.

தமிழரசுக் கட்சியினதும், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் அரசியல் பத்திரிகையாக அமைந்த **சுதந்திரன்** கலை, இலக்கியத்தில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை என்ற போதிலும், சுதந்திரன் வெளியீடாக 70

www.tamilarangam.net

களில் வெளியான சுடர் சஞ்சிகை இலக்கியத்திற்கும் இடம் கொடுத்தது. ஆனால் அவற்றை இலக்கியமாகக் கொள்வது யோசனைக்குரியது! காசி ஆனந்தன் பாணிக் கவிதைகளும், காவலூர் ஜெகநாதன் பாணிச் சிறுகதைகளும், `உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு' என்கிற கோஷங்களுமாக சுடர் அமைந்தது. இவை வெறுமனே உணர்ச்சிபூர்வமானவையாக அமைந்து வாசகரிடத்தில் உணர்வேதும் தோற்ற வைக்கப்பட முடியாமல், கோஷங்களாகி வலுவிழந்து போயின. சுடரில் எழுதிய எவரும் காலத்தில் நிலைத்துத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. சுடரில் புனைபெயரில் எழுதிய அ.யேசுராசா(`அலை' ஆசிரியர்) போன்றோர் கூட அதனூடாக தமது பெயர் வெளிவருவதை விரும்பாதவர்களாகவே காணப்பட்டார்கள். இவர்கள் காலம் கழித்த குப்பைகளில் ஒரு குப்பையாகிப் போனார்கள்.

ஆனால் அவற்றிலிருந்து 80கள் பெரிதும் வேறுபட்டிருந்தது. அவை உருவத்திலும், உள்ளடக்கத்திலும் புதிய செய்தியை, புதிய வடிவத்தினைக் கூறுவனவாக அமைந்தன. உதாரணமாக, தீர்த்தக்கரை சஞ்சிகையில் இனக் கலவரம் குறித்து ஆனந்த ராகவன் எழுதிய எதிரொலி சிறுகதைக்கும், சுடரில் வெளிவந்த இனக் கலவரம் தொடர்பான சிறுகதைக்கும் இடையில் உருவ ரீதியாகவும், உள்ளடக்க ரீதியாகவும் பெருத்த வேறுபாடு இருந்தது. `எதிரொலி' மிகக் கலாபூர்வமான படைப்பு.

இது திடீரென நிகழ்ந்த மாற்றம் அல்ல. ஒரு நாளில், ஓரிரவில் இவ்வாறு மாற்றம் வருவதும் சாத்தியமல்ல. அல்லது `இதோ நான் இலக்கிய வடிவத்தை மாற்றி அமைக்கப் போகிறேன்' எனச் சபதமிட்டு தனி ஒரு எழுத்தாளனாலும் சாதிக்கக் கூடிய மாற்றம் அல்ல. இது வழிவழி வந்தது. தொடர்ச்சியான வளர்ச்சி தான்.

பாரதி யாரின் கவிதை பாரம்பரியம் 3 கிளைகளாக விருத்தி பெற்றது என்பர் ஒரு விமர்சகர். "பாரதி ஒரு யுகசந்தி என்பது மெய்யே... அதன் ஒரு கிளை பிச்சமூர்த்தி என்றால், அதன் மறுகிளை மஹாகவியே. பாரதி வளர்த்த சில கவிதைப் பண்புகளின் தோல்வியே பிச்சமூர்த்தி என்றால், அத்தோல்வி நிகழாமல் அதனை இன்னொரு கட்டத்திற்கு உயர்த்திய வெற்றியே மஹாகவி எனலாம்" என மஹாகவியின் கோடை பற்றிய குறிப்பில் சண்முகம் சிவலிங்கம் குறிப்பிடுகிறார்.

பாரதியார் வழிக் கவிதைகள் மஹாகவியில் செறிந்து, நீலாவாணன், முருகையன், சண்முகம் சிவலிங்கம், எம்.ஏ.நுஃமான் என விரிந்து, சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன் என வேறு வடிவத்தில் முகிழ்க்கின்றது. இது 80களின் தொடக்கத்தில் நிகழ்கிறது. மறுபக்கத்தில் பாரதிதாசன் பரம்பரை திராவிட இயக்கப் பாரம்பரியத்தினூடாக காசி ஆனந்தனிலும் செறிகின்றது. ஆயினும் பாரதிதாசனின் உயிர்ப்பும், வீச்சும் காசி ஆனந்தனினில் காணமுடியவில்லை. பாரதிதாசன் கரும்பு எனின், காசி ஆனந்தன் அதன் சக்கை.

80கள் சேரன், ஜெயபாலன், இளவாலை விஜயேந்திரன், செழியன், துஷ்யந்தன், தமயந்தி என உலாவருகின்றன. (சில பெயர்கள் விட்டுப் போயிருக்கலாம்) இக் காலத்தில்தான் கவிதை உயிர்ப்பும், வீச்சும் கொண்டு வெளிவந்தன. சொந்த அனுபவமும், மக்களின் துயரங்களும் கவிதைகளின் பாடுபொருளாயின.

இவை இன்னும் விரிவாகக் கவனிக்கப்பட வேண்டியவை.

ஆனால் கவிதைதான் என்றில்லை. சிறுகதை, நாவல் எனவும் இலக்கியங்கள் இக் காலத்தில் முக்கிய வடிவமாகின்றன. சிறுகதை புதுவடிவம் பெறுகி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ன்றது. எனினும் சிறுகதைக்குரிய வெளியீட்டுக் களம் குறைந்திருந்ததினால், வடிவத்தில் புதுமையான சிறுகதைகள் தோன்றுவதற்கு இடம் குறைக்கப்பட்டது. ரஞ்சகுமார், அ.ரவி போன்றோரின் சிறுகதைகள் இவ் வகையில் குறிப்பிட வேண்டியவை.

நாவல்கள் என்கிறபோது ஐந்து விரல்களுக்குள் அடங்கக் கூடிய நாவல்களே வெளிவந்தன. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிய ஒரு கோடை விடுமுறை, கோவிந்தன் எழுதிய புதியதோர் உலகம், மு.தளையசிங்கம் எழுதிய ஒரு தனி வீடு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நாடகம் குறிப்பாக முக்கிய மாற்றம் பெற்றது. அமைப்புகளின் கருத்தை வெளியிடுவதற்கு அது முக்கிய வடிவமானது. நாடக துறையில் ஏற்பட்ட மாற்றம் பற்றி முதலில் கவனித்த பின்னர் மற்றைய துறைகள் பற்றி நோக்கலாம்... (தொடரும்)

– அ.பாபுராம்(ஈழம்)

---

*சென்ற இதழில் அறிவிக்கப்பட்ட ஆக்கங்களிற் சில இடமின்மையால் இவ்விதழில் இடம்பெறாதுபோய் விட்டன!!! – ஆ.கு*

---



# நீயே கதி !

நான் முழுதும் உன் முன்னிருக்க
நான் பாடுகின்றேன் நமபார்வதிபதே!

நல்லாய் பிள்ளை படிக்குதோ தெரியாது!

நல்ல சுகமில்லாமல் கிடந்தாலும்
நினைவெங்கும் நீயிருக்கையில்
நேரமேது வைத்தியரிடம் போக!

ஆத்தில் அவசரமாய்
அனைத்தும் முடிப்பது
ஆறுதலாய் உன்முன்னமரவே!

ஆறு வருசமாய் கற்றதென்று ஏதுமில்லை
இன்றைய கதாநாயகன், நாயகியை
அறிந்ததைத் தவிர!

பொழுதுக்குள் பொருள் வேண்டாது
பட்டினி கிடந்தாலும்
பழுதுபடாமல் நீயிருந்தால்
அதுவே போதும்!

போனால் போகட்டும் என்று மற்றவை போல்
போக்கினால் உன்னையும்
பொறுக்குமோ என்னுயிர்!

நமபார்வதிபதே ரீ.வி.யே !!!

*

**சொக்கோபாய்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இப்படிக்கு . . .

## முதல் கரண்டி..... !

மனித நசிப்புகளைக் கண்டிக்கும் போக்கும், மானுட நாகரிகத்தின் சகல மையங்களையும் நேசிக்கிற தன்மையும் தூண்டிலின் தனித்துவத்தை வலுச் செய்யும். இரத்த வெறி பிடித்து, மனிதத் தன்மையைச் சப்பித் தின்னுகின்ற சகல கொடுமையாளர்களுக்கும் எதிராகத் தூண்டிலின் எழுத்துகள் போர் செய்ய வேண்டும். மனித வாழ்வின் ஜனனாயகத்தை, மனிதர்களுக்காகத் தேடிக் கொடுக்கிற பொறுப்பு பத்திரிகைகளுக்கிருக்கிறது.

தமயந்தியின் கவிதை பாஸிஸத்துக்கு எதிரான பீரங்கித் தாக்குதலாக உள்ளது. தன்பாட்டுக்குச் சும்மா இருந்த மனிதர்களை கொன்று குவித்த அராஜகர்களுக்கு எதிராக கவிஞர் உண்மையிலேயே குருதி கொதித்தெழுந்திருப்பது அவருக்கிருக்கின்ற மனித நேயத்தின் மீதான யார்த்தமான நேசிப்பைக் காட்டுகிறது. இது போலமைந்த படைப்புகள் கலை-இலக்கியத்தில் சுவடுகளாக அமைவது மாத்திரமல்லாமல், கொடுமைகளைக் கீறிக் கிழிக்கின்ற கூர்களாகவும் உருப் பெறுகின்றன.

முஸ்லீம் காங்கிரஸின் கரிநாள் பற்றிய கட்டுரை, சில கருத்துகளில் யோசிக்க வேண்டியவையாக அமைந்தாலும், முழுக்க தெளிவான சிந்தனையில் எழுதப்படவில்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் - எவரும் - எந்த நிகழ்வின் போதும் அரசை எதிர்த்தேயாக வேண்டும் என்கிற ஒரு பக்க வறட்டுச் சிந்தனையர்கவே கட்டுரையாளர்களது எண்ணக் கருக்கள் தோன்றுகின்றன. அரச எதிர்ப்பு மட்டுந்தானா தனித்துவத்தை அடையாளப்படுத்தும்?

முஸ்லீம் காங்கிரஸ்தான் முஸ்லீம்களின் தேசிய இயக்கம், நான்தான் முஸ்லீம்களின் விடுதலைக்கான தேசியத் தலைவர் என்று அஷ்ரப் எப்போதும் தன்னிச்சையாகச் சொன்னதேயில்லை. தான் அப்படி அல்ல என்றுதான் அடிக்கடி கூறி வருகிறார். கட்டுரையாளர்கள்தான் அப்படியொரு பொய்த்தனமாய்ச் சிந்தித்து(?) இருக்கிறார்கள்.

முஸ்லீம் புலி இயக்கம், முஸ்லீம் பிரபாகரன் என்பதெல்லாம் பச்சைப் பொய். நிகழச் சாத்தியமற்றவை. சகோதர இனங்களுக்கு துவேசத்தின் முதல் கரண்டியை பருக்குகிற அபாயமாயிருக்கிறது. இவ்வாறான செயற்பாடுகளில்தான் நிதானம் அவசியமாகிறது. இப்படியான போக்குகளில் ஆசிரியர் குழு தன் கொள்கையை வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.

*- அ....! (ஈழம்)*

## வெள்ளை என்பதாலா...?

தூண்டில் 53+54 வாசித்தேன். "காணாமற் போன கண்கள்" பற்றிய கொடூரம் அதிர்ச்சியைத் தந்தது. உண்மையைப் பேச முடியாமல், கண்டும் காணாதவர்களாக, கைகட்டி, உயிர் ஊசலாடும் நிலையில் இன்று மக்கள். கடத்திச் செல்லப்பட்டு, கண்கள் தோண்டப்படும் நிலையிலுமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'ஓட்டோனொமன்' என்ற சொல்லிற்குச் சரியான விளக்கம் கொடுக்கப்படவில்லை. இவர்கள் ஏகாதிபத்தியத்தை, ஸ்ராலினிஸத்தை, தற்போதுள்ள அரசமைப்பை எதிர்க்கும் தன்னிச்சைவாதிகள். ஆனால் இவர்கள் அமைப்பாக இயங்குபவர்கள். இவர்களுக்கென்று தனிக் கொள்கைகள், தத்துவங்கள் இருப்பினும் தத்துவத்தை மட்டும் கதைத்துக் கொண்டிருப்பவர்களை எதிர்ப்பவர்கள். செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள். இவர்களது அடிப்படைக் கொள்கையானது ஒரு மனிதன் சுயமான தனது சிந்தனையினூடாக ( ஒரு அமைப்பின் ஆதிக்கமும் இன்றி ), செயற்பாட்டை நிர்ணயிக்க வேண்டும் என்பதே.

தமிழ் இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை பெண்கள் இரண்டாம் தட்டிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள், புலிகள் பெண்களைப் பாவிக்கிறார்கள் என்கின்ற உண்மையை அறியாமல், துப்பாக்கி தூக்கிச் சுடுவதால் பெண்கள் ஆண்களுக்குச் சரிசமனாகி விட்டார்கள் என்று தவறாக எண்ணிக் கொண்டிருப்பவர்களை "தற்கொலையாளிகள்" நிச்சயம் சிந்திக்க வைத்திருக்கும்.

ஒரு ஆணோடு இணைந்து வாழும் பெண் எவ்வளவுதான் படித்திருந்தாலும், அரசியல் அறிவு, செயற்பாடு கொண்டவளாக இருந்தாலும், அவள் பெண் என்று பார்க்கப்பட்டு, ஆணுக்குச் சமனற்றவளாக கணிக்கப்படுதல் இன்றைய யதார்த்தம். பாலசிங்கத்தின் மனைவி தமிழ்ப் பெண்ணாக இருந்திருந்தால் இதே நிலமைதான்! அடேல் அவ்வியக்கத்தின் ஆண் தலைமைகளுக்குச் சரிநிகராக கருத்துக் கூற முடிவதன் ஒரே காரணம் அவர் "வெள்ளை" நிறம் என்பதால் மட்டுமே. காலனித்துவத்தினூடாக "வெள்ளை" மேலானது என்று வளர்க்கப்பட்ட மனோநிலை சுயமாக சிந்தித்து பல பிரச்சினைகளை ஆராயும் நபர்களிடையேயும் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது என்பதற்கு உதாரணமொன்று: பெண்களின் சமத்துவத்திற்காக ஆய்வுக் கட்டுரைகளை எழுதும், யாழ் பல்கலைக்கழகத்திற்கும், தமிழ் இலக்கியத்திற்கும் நெருக்கமான உறவுள்ள பெண்ணொருவர் அண்மையில் ஜேர்மனி வந்திருந்தார். இவரின் வருகையை முன்னிட்டு புகலிட தமிழ்ப் பெண்கள் சிலர் கூடி ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்திருந்தோம். ஆனால் அப் பெண்மணியோ தன்னுடன் வந்திருந்த வெள்ளைக்காரப் பெண்ணுக்கு முக்கியத்துவம் கொடுத்து எங்களை அலட்சியம் செய்தார். இது அவருடைய இனவாதத் தன்மை என்று புரிந்தது.

ஐரோப்பாவிலுள்ள புலிகளின் உறுப்பினர்கள் அனைவருமே ஆண்கள்தான். பரத நாட்டியத்தைப் பெரும்பாலும் பெண்களே பயின்று வருவதாலோ என்னவோ கலைக் குழுவில் மட்டும் பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இனவாதமும், நிறவாதமும் வளர்ந்து உயிர்களைக் குடிக்கும் இந்தப் பயங்கர நிலையிலும் நாங்கள் அசையாமல் இருக்கிறோம். இது தமிழர்களின் மாற்ற முடியாத நோயாகி விட்டதா? அமைப்பாகி இயங்குவதற்கு அவசரமாய் செயற்பட வேண்டிய தேவை இன்று எம்மில் ஒவ்வொருவருக்கும் உண்டு.

*- மீரா*

---

## *நிலைப்பாட்டை முன் வை...!*

---

"காணாமற் போன கண்கள்" என்ற சம்பவம் பற்றி வாசித்ததும் கண்ணிலிருந்து கண்ணீர் வந்தது. ஒரு தேசத்தின் பார்வையை எப்படி இவர்களால் விலை பேச முடிந்தது என நினைக்கும்போது நெஞ்சு வலிக்கின்றது.

இரவல் தூண்டிலில் எம்.ஏ.நுஃமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னின் கவிதை தனிச் சிறப்புப் பெற்றது. நேற்றைய மாலை எவ்வளவு ரம்மியமானது, சுகமானது, அதுவே வேண்டும். இன்றைய காலை மனதை, ஆத்மாவை அவித்து சுட்டெரித்து விட்டது. போதும்! இனிவரும் காலங்களாவது நேற்றைய மாலைபோல் மலரட்டும்! இன்றைய சூழலில் பழைய, கடந்துபோன பசுமையான நினைவுகளில் தத்தளித்துக் கொண்டிருக்கும் "நேற்றைய மாலைகள்" எப்போது வரும் என்பது பெரிய கேள்விக் குறியாகும். வருமா என ஆத்மா ஏங்கிக் கிடக்கிறது. மக்கள் காத்துக் கிடக்கின்றனர்.

ஈழத்தின் இன்றைய அரசியல் தீர்வுகள் குழப்பமுற்று, நம்பிக்கையற்ற சூழ்நிலைகளையே மீண்டும் மீண்டும் தோற்றுவிக்கிறது. வடக்கு, கிழக்கு இணைப்பு, சமஷ்டி போன்ற தீர்வுகள் இன்னும் முற்றுமுழுதாக அல்லது ஓரளவுக்கேனும் "பலம் வாய்ந்த அரசியல் கட்சி"களினால் (தீர்வைத் தோற்றுவிக்க அரசியல் செல்வாக்குள்ள கட்சிகள்) அங்கீகரிக்கப்படாத அல்லது ஏற்றுக் கொள்ள மனமில்லாத புறக்கணிப்பு நிலை காணப்படுகிறது.

இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை எந்த அளவில், எப்படி முன்னகர்த்தலாம், தீர்வு கிடைப்பதற்கான வழிவகைகளை தூண்டில் தெளிவு படுத்த வேண்டும் என்பதை நான் அவசியமும், அவசரமுமான பணியாகக் கருதுகிறேன். அடுத்த இதழிலாவது தூண்டில் தனது நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும்.

களில் வெளியிடப்படும் தமிழ் வெளியீடுகளும் நிவர்த்தி செய்வதாகவே உணர்கிறேன். இதற்கு அங்குள்ள பத்திரிகைச் சுதந்திரமும் உங்களுக்குத் துணை புரியலாம். இங்கே துப்பாக்கிகளுக்கிடையில் தினமும் எங்களால் நினைத்தும் பார்க்க முடியாத முயற்சி.

சிந்தனை சுதந்திரத்தை பறிகொடுத்து விட்டு நிற்கும் எங்களுக்கு பத்திரிகா தர்மத்தையோ, எழுத்துச் சுதந்திரத்தையோ பேணாத "பிரேமா புகழ் மாலை" பத்திரிகைகளால் தரப்படும் செய்திகளே கிடைக்கின்றன.

ஈழத்தில் இனவாத சக்திகளின் தலையெடுப்பானது சகோதரர்களாக வாழ்ந்த இரு இனங்களை மோத விட்டுள்ளது. ஈழ விடுதலைப் போர் தமிழ்ப் பேரினவாதமாக மாறும் கூறுகள் தென்படுகின்றன. குறுகிய தமிழ்த் தேசிய சிந்தனையால் அகதிகளாகும் ஒரு இனம் ஈழ இணைப்பை கேள்விக் குறியோடே நோக்கும் என்ற உண்மையை உணர்த்தி, எல்லா இனங்களினதும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் உங்கள் வெளியீடுகள் ஈழத்தில் வாசிக்கப்பட்டால் இனக் கொந்தளிப்பு நிலைகளில் சிக்கிய மக்களுக்கு பிரச்சினைகளின் எதார்த்தம் புரியும்.

நான் ஒரு முஸ்லீம். ஆனால் குறுகிய இனவாதக் கண்ணோட்டம் கொண்டவனல்லன். மனிதத்தை நேசிப்பவன். எந்தக் கோணத்திலும் அடக்குமுறையை ஆதரிக்காதவன்.

*- பௌ......(ஈழம்)*

*- அ... (ஈழம்)*

## *துப்பாக்கிகளுக்கு இடையில்....!*


ஈழப் போராட்டம் பற்றிய ஒரு சுயவிமர்சனத்தின் தேவையை உங்களது வெளியீடுகளும், ஏனைய ஐரோப்பிய நாடு

*சென்ற இதழின் பின்னட்டையில் தபாற் கணக்கு இலக்கம் தவறாகக் குறிப்பிடப் பட்டு விட்டது. இதனால் சந்தா அனுப்பியவர்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம். தவறு இந்த இதழில் திருத்தப்பட்டுள்ளது. - ஆ.கு*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் தமிழ்ப்படம் ஒன்றைப் பார்த்தான். படத்தின் பெயர் "ஜாதிமல்லி". கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் புதுமை இயக்குநர் பாலசந்தர். நடிகர்கள் குஷ்பு தலைமையில் பல புதிய முகங்கள்.

கதாநாயகின் தாயார் இசை நிகழ்ச்சி ஒன்றின் போது இனவெறியர்களால் சுட்டுக் கொல்லப்படுகிறான். இதைப் பார்த்த கதாநாயகி பயப்பட்டும், துக்கமடைந்தும் சொந்த ஊரான ஹைதராபாத்திலிருந்து ஊட்டி வருகின்றான். அங்கே பணக்காரனாயிருந்தும் ஒரு `சேஞ்சுக்காக` ரக்ஸி ட்ரைவராக இருக்கும் - மனைவியைப் பிரிந்த - கதாநாயகனைச் சந்திக்கிறான். அவனும் இசைப் பிரியன். வழக்கம் போல இருவருக்கும் காதல் ஏற்படுகிறது. காதல் கனிந்து வரும் நேரத்தில் ஹைதராபாத்திலுள்ள மிகப் பெரிய செல்வந்தன் கதாநாயகியைத் தேடிக் கொண்டு வந்து அவளில் அன்பு மழை பொழிந்து, அவளைத் தன் வீட்டுக் கூட்டிக்கொண்டு போய் வைப்பாட்டியாக சிறை வைக்க, இடையில் குழம்பிப் போயிருந்த கதாநாயகன் பிறகு தெளிவடைந்து ஊரடங்குச் சட்ட நேரம் வில்லனுடன் மோதி நாயகியைச் சிறை மீட்கிறான்- இது முதலாவது கதை.

தங்கள் காதலுக்குப் பெற்றோர் மதத்தைக் காட்டி எதிர்ப்புத் தெரிவித்தமையால் காதலர்கள் வீட்டைவிட்டு வெளியே ஓடிக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்களின் பெயரை யாராவது கேட்டால் மொஸ்கோ, பேர்லின் என்பார்கள் - இது இரண்டாவது கதை.

மற்றவர்களின் ஏமாளித்தனத்தையும், பரிவையும் வைத்துப் பிழைக்கும் ஒரு தம்பதி - இது மூன்றாவது கதை.

படம் முடிந்ததும் ரூம் மேற் செற்றியில் சரிந்து படுத்தான். விக்கிரமாதித்தன் எழுந்து குளியலறைக்குப் போய் கதவைச் சாத்தி விட்டுத் திரும்பினான். அங்கே வேதாளம் `ஷவரில்` பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தது.

"ஆ.. பிறகும் வந்திட்டியே?"

"தொடர்ந்து வருவேன் மகனே. நீ தமிழ்ப் படம் பார்க்கின்ற ஒவ்வொரு தடவையும் வருவேன்" என்றபடி வேதாளம் பல்லிளித்தது.

" என்னை என்ன செய்யச் சொல்லுறாய்? வேலை, வெட்டியில்லை. சும்மாயிருக்கிற எனக்கு இதொண்டு தான் பொழுதுபோக்கெண்டது உனக்கேன் விளங்கேலை?"

"சினமடக்கு விக்கிரமாதித்தா. நீ படம் பார்ப்பதை நான் தடுக்கவில்லையே. என் சந்தேகங்களுக்கு மட்டும் உன்னுடைய விளக்கங்களைச் சொல்லிவிடு. நான் வந்த சுவடே தெரியாமல் போய்விடுகிறேன். பாலசந்தரின் படம் என்று விழுந்தடித்துக் கொண்டு பார்த்தாயே. அவர் என்ன சொல்லுகிறார்?"

"சாதியின்ரை பேராலையோ, மதத்தின்ரை பேராலையோ சண்டை பிடிக்க வேண்டாமெண்டு சொல்லுறார். ஆனும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்ணும் காதலிக்கிறதாலை வாழ்க்கையை ரசிக்க முடியும் என்கிறார். இசைக்குப் பிரிவினையள் இல்லையென்கிறார்"

"விக்கிரமாதித்தா, என்னையே நீ சோதிக்கிறாயா? மேம்போக்காகக் கூறிவிட்டு தப்பிவிடலாம் என்று நினைத்துவிடாதே. இந்த வேதாளத்தை அவ்வளவு இலேசாக ஏமாற்ற முடியாது. இப் படத்தின் மூலம் மக்களுக்குப் பாலசந்தர் எதைத் திணித்திருக்கிறார் என்று கூறிவிடு"

"சாதி, மத, இனச் சண்டையளின்ரை அடிப்படையைக் காட்டாட்டிக் கூடப் பரவாயில்லை. ஆனா இதுக்கெல்லாம் காரணம் அப்பாவிச் சனங்கள்தான் எண்டு சனங்களிலையெல்லே குற்றம் சாட்டுறார். இண்டைக்கு இந்தியாவிலை ஆளுற இந்திரா காங்கிரஸிலை இருந்து எதிர்க்கட்சி பாரதிய ஜனதாவரை மதத்தை அடிப்படையாய்க் கொண்டு இயங்குற கட்சியளெண்டு பாலசந்தருக்குத் தெரியாதாக்கும். இப்பிடியான கட்சியள்தான் தங்கடை பதவியைக் காப்பாத்துறதுக்கும், அதிகாரத்தைக் கையிலெடுக்கிறதுக்கும் தங்கடை குண்டர் படையளை ஏவிவிட்டு சண்டையைத் தொடக்கி அப்பாவிச் சனங்களைப் பலியெடுக்குதுகள் எண்டதைப் பாலச்சந்தர் சொல்லமாட்டார். ஏனெண்டால் அவர் தான் ஆற்றை ஆளெண்டதை 'ரோஜா' படத்திலை வடிவாய் காட்டிப் போட்டார்.

"சரி. சாதிப் பிரச்சினைக்குத் தான் மக்களில் பழியைப் போட்டார். யதார்த்த இயக்குநர் என்று புகழப்படும் பாலசந்தரின் படத்தில் யார்த்தம் எப்படி என்று சொல் விககிரமாதிக்கா"

"யாதார்த்தமோ? காதலுக்குத் தடை விதிச்சதாலை காதலர்கள் இந்தியா முழுக்க நேர் போய்க் கொண்டிருக்கினம். அவைக்கு வருமானம் இல்லை. மாத்த உடுப்பில்லை. சாப்பாடில்லை. ஆனால் நல்ல திடகாத்திரமா, வடிவாய், சந்தோசமா ஆடிப் பாடிக் கொண்டு திரியினம். பெரிய பணக்காரன் ஒருதன் தன்ரை காசைப் பாவிக்காம, தானே நாயகியின்ரை வீட்டைத் தேடிவந்து எல்லாப் புறக்கணிப்புகளையும் பொறுத்துக் கொண்டு அவளைக் கெஞ்சி மண்டாடிக் கூட்டிக்கொண்டு போறான். இரண்டுபேர் றோட்டிலை நிண்டு தங்கடை ரத்தத்தாலை சுவரிலை கையடையாளம் பதிச்சு அதிலை மதத்தைக் கண்டு பிடிக்கச் சொல்லிக் கேட்ட உடனை, வெறிபிடிச்சு அலைஞ்சு கொண்டிருந்த கூட்டமொண்டு தங்கடை கையிலயிருந்த ஆயுதங்களை கீழை போட்டிட்டு திருந்தியினம்."

"விக்கிரமாதித்தா, குற்றம் கண்டுபிடிப்பதே உனது வழக்கமாகிவிட்டதா?"

"அப்பிடிச் சொல்லாதை வேதாளம். மரகதமணியின்ரை இசை திறமாயிருக்கு. மற்றவர்களை ஏய்த்துப் பிழைக்கும் தம் பதியனைக் காட்டியிருக்கிற விதமும் நல்லாயிருக்குது"

"பெண்கள் விடயத்திலை பாலசந்தர் எப்படி?"

"நீ கூட டபிள்மீனிங்கிலை கதைக்க வெளிக்கிட்டிட்டாய். மனிசிமாரைப் பிரிஞ்ச புருசன்மார் இன்னொரு பொம்பிளையைக் காதலிச்சுக் கலியாணம் செய்யிறது எத்தினையோ படங்களிலை வந்திட்டுது. ஆனா கலியாணம் கட்டின பொம்பிளை புருசனைப் பிரிஞ்சு இன்னொருத்தனைக் காதலிக்கிறது மாதிரியோ அல்லது இன்னொருத்தனைக் கலியாணம் செய்யிற மாதிரியோ காட்ட பாலசந்தரும் தயாரில்லை. ஆம்பிளையள் இறுக்கமாய் இருப்பினம். பொம்பிளையள்தான் தங்கடை காதலை அவைக்கு வெளிப்படுத்த வேணுமாம்"

"நீ என்னதான் சொல்கிறாய்?"

"எம்.ஜி. ஆரையும், காந்தியையும் வைச்சே

[தொடர்ச்சி ஆம் 26 பக்.]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீர்வென்ன...?

## தமிழீழமே தீர்வு!
## புலிகள் தமிழ்மக்களின் எதிரிகள் அல்ல !!
## தலைமையை உருவாக்குவது புத்திஜீவிகளே !!!

கடந்த வருடங்களில் தூண்டிலில் வெளிவந்த தேசத்தின் குறிப்புகளில் எழுப்பப்பட்ட பல பிரச்சினைகள் விவாதங்களாக சூடு பிடித்த போதிலும், அவை எதிர்பார்த்தளவிற்கு விரிவாக நடக்கவில்லை. மூன்றாவது பாதை குறித்த விடயங்கள் விரிவாக ஆராயப்படாமலே போய்விட்டன. இவ் விவாதங்களில் ஆரம்பத்தில் தென்பட்ட வேகம் தற்போது கொஞ்சம் தளர்ந்து போயிருப்பதாகவே எனக்குப் படுகிறது. எப்படியோ, இப் பிரச்சினைகள் திறந்த விவாதத்திற்காக தொடர்ந்தும் முன்வைக்கப்படுவது மிகவும் அவசியம் என்றே நான் கருதுகிறேன். இது தொடர்பான கருத்துகள் – நேரடியாக இல்லாவிட்டாலும் – தூண்டில், சமர், மனிதம், தேடல், உயிர்ப்பு ஆகிய சஞ்சிகைகளில் அவ்வப்போது வைக்கப்பட்டிருப்பினும், இதை ஒரு அவசியமான விடயமாக பலர் கருதவில்லையோ என்றே எண்ணத் தோன்றுகிறது. உயிர்ப்பு சற்று மாறுதலாக, குறிப்பிட்ட சில விடயங்கள் மீது அதன் கருத்தை வைத்திருக்கிறது. ஆயினும் அது தொடர்பாகவும் தீவிர கருத்தாடல்கள் இடம்பெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

விவாதத்திற்கான கருத்துகளை முன்வைக்க முன்பாக சமீப காலங்களில் நடந்துவரும் விவாதங்களின் போக்கு சம்பந்தமாக பொதுப்படையாக ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நாம் இன்று வாழும் காலகட்டம் பழையனவற்றைக் கேள்விக்குள்ளாக்குவதும், புதியவற்றை இனங்கண்டு கொள்வதற்குமான ஒரு திறந்த கருத்தாடல்களை நடத்தும் காலகட்டமே அன்றி எண்பதுகளின் ஆரம்பம் அல்ல. அப்போது நாம் நினைத்ததே சரியானது என்றே ஒவ்வொருவரும் எண்ணிக்கொண்டிருந்தோம். அதன் விளைவுதாம் நாதியற்றவர்களாக எம்மை நாமே ஆக்கிக்கொண்ட நிலை. எனவே நாம் எமது விவாதங்களை முடிந்தளவு பொறுப்புணர்வுடனும், அக்கறையுடனும், மாற்றுக் கருத்துகளைக் கூறுபவர்களை அலட்சியப்படுத்தும் மனப்பான்மையைவிட்டும், நிதானமாக அணுக வேண்டும் என்று கருதுகிறேன்.

இந்த விடயத்தில் சமரின் அணுகுமுறை – அதன் கருத்து குறித்து தொடர்ச்சியான விவாதங்களில் பார்ப்போம் – அவ்வளவு ஆரோக்கியமானதாகப் படவில்லை. கருத்துகளில் தீவிரம் இருப்பது அவசியந்தான்; ஆனால் முடிந்தளவிற்கு கருத்துகளை சொல்லும் விதத்தில் அதைக் காட்டாமல் இருப்பது நல்லது. இந்த வேகம் சிலவேளைகளில் கருத்துகளைச் சொல்ல நினைப்பவர்களையும் மௌனிகளாக்கி, கருத்துகட்கான விவாதக் களத்தையே சந்தேகிக்க வைத்துவிடும். நாம் இப்போது நடாத்துவது கருத்து விவாதமே அன்றி, எமது சொந்தக் கருத்தைப் பிரச்சாரம் செய்வதல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவிரவும் மோதுவது தவறான போக்குகளுடனேயே அன்றி நபர்களுடன் அல்ல. போக்குகள் விரும்பியோ, விரும்பாமலோ எமது மக்களிடையே வேருன்றி இருக்கின்றன. சரியானதைக் கண்டுபிடித்து அதை முன் வைக்கும்வரை, ஏற்கெனவே உள்ள போக்குகளை நம்புபவர்களை 'தயைதாட்சணியமற்று' எதிர்ப்பதும், பழகிப்போன 'கடுமையான' வார்த்தைகளைப் பயன்படுத்துவதும் ஆரோக்கியமானதாக எனக்குப் படவில்லை. எமது இடதுசாரிப் பாரம்பரியத்தின் 'ஒடுகாலி' 'துரோகி' போன்ற வசைமொழிகள் சாதிப்பதைவிட, ஆரோக்கியமான கருத்துப் பரிமாறல்கள் அதிகம் சாதிக்க முடியும் என நம்புகின்றேன்.

'மூன்றாவது பாதை' என்பது என்ன? உண்மையில் அது வெறுமனே அரசு சார்ந்தவர்களது போக்குக்கும், புலிகளுக்கும் இடையிலான அல்லது இவ்விரண்டும் அல்லாத வேறொன்று என்பது மட்டுந்தானா? இதற்கு மேலாகவும் அதற்கு ஏதாவது அர்த்தம் உண்டா? இவ்விரண்டு பாதைகளுடனும் முரண்படுவது மட்டுமே ஒரு மூன்றாவது பாதையை உருவாக்கி விடுமா? இவ்விரண்டு பாதைகளுடனும் அது எவ்வெவ்விடங்களில் எவ்வெக் காரணங்களுக்காக முரண்படுகிறது? வெறும் முரண்பாடு மட்டுமே இப் பாதையைத் தீர்மானிக்கிறதா? அல்லது அப்படி ஒரு பாதை இருந்து, அது இவ்விரண்டிலிருந்தும் வேறுபடுவதால் அதை மூன்றாவது பாதை என்கிறோமா? என்கிற கேள்விகள் இயல்பாகவே மூன்றாவது பாதை பற்றிப் பேசியதும் யாரிடமும் எழுவது சாத்தியம்.

உண்மையில் இந்தக் கேள்விகள் வெறும் கேள்விகளல்ல. இவை மூன்றாவது பாதையின் நியாயப்பாடு, அதன் உயிர் என்பவை பற்றிய மிகவும் முக்கியமான கேள்விகள் ஆகும். இந்தக் கேள்விகட்கான பதிலிலேயே மூன்றாவது பாதை பற்றிய முக்கியமான பல விடயங்களை நாம் இனங் கண்டு விடலாம்.

நிலவுகின்ற இரண்டு போக்குகளுடனும் முரண்படுவதால் மட்டுமே மூன்றாவது பாதையை உருவாக்கிக் கொள்வது என்பது சாத்தியமற்றதாகும். மூன்றாவது 'நிலை' என்பது வேறு. மூன்றாவது 'பாதை' என்பது வேறு. சந்தேகத்திற்கு இடமில்லாமல் நான் முதலில் குறிப்பிட்ட அனைத்துப் பத்திரிகைகளும் மூன்றாவது நிலை சார்ந்தவையே. ஆனால் மூன்றாவது நிலை மூன்றாவது பாதையாகி



"கவலையை மறக்கத் தண்ணியடிச்சன்"

"அப்ப பிறகுமேன் கவலையாய் இருக்கிறாய்?"

"இப்பிடி தண்ணியடிச்சு அழிஞ்சு போறேனே என்டதை நினைக்க கவலையாயிருக்கு"

"அப்பேன் பிறகும் தண்ணியடிக்கிறாய்?"

"இப்படி அழிஞ்சு போறேனே என்ட கவலையை மறக்கத்தான்"

- இன்னன்னா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விடாது. முன்னிரண்டு பாதைகட்கும் அது மாற்றாக அமைந்தும் விடாது. மூன்றாவது நிலையில் உள்ளவர்கள், தமது நிலையைத் தாமே உணர்ந்து கொள்ளவும், தமது அரசியல் ஸ்திரப்பாட்டை உறுதியாக்கிக் கொள்ளவும் மூன்றாவது பாதையை தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு அடிப்படையாகத் தம்மை அறிதல்; தமது சூழலை அறிதல்; தாம் செல்ல வேண்டிய இலக்கினைப் புரிந்து கொள்ளுதல் என்பனவாகும். அப்போதுதான் மிகவும் தெளிவாக, ஸ்தூலமாக நாம் எப்படி மற்றிரு பாதைகளிலிருந்தும் வேறுபடுகிறோம் என்று புரிந்து கொள்ள முடியும்; மற்றைய பாதைகள் குறித்த மயக்கங்களை, ஊசலாட்டங்களை தவிர்த்துக்கொள்ள முடியும்.

பாதை தெளிவில்லாவிட்டால் பயணம் ஸ்திரமாக இருக்க முடியாது. பயணம் ஸ்திரமாக இல்லாவிட்டால் இலக்கை அடைய முடியாது. அத்துடன் இலக்கை மறந்து விடவும் வாய்ப்புண்டு!!


இப்போதைக்கு எமது பாதை உருத் தெளிவற்றதாக இருக்கலாம். ஆனால் இலக்காவது தெளிவாக இருக்கிறதா என்பது முக்கியம். இலக்கிலும் மயக்கம் இருப்பின் நாம் பாதையைப் பற்றிப் பேசவே முடியாது. இலக்குத் தெளிவாக இல்லாவிடில், மூன்றாவது நிலையில் நிற்கும் நாம் எப்போதும், எக்காலத்திலும் அவ்விடத்திலேயே நிற்போம். எமது உணர்வுகட்கு எதிரானவற்றை எதிர்த்தபடியே நாம் காலத்தைக் கடத்துவோம். எமது அணியை எம்மை அறியாமலே மற்றைய பாதைகளை நோக்கி விரட்டுவோம். ஒரு எதிரணியாக வாழ்வதிலேயே, 'அமுக்கக் குழுக்களாகவே' செயற்படுவதிலேயே திருப்திப்பட்டுக் கொள்வோம். நிகழ்ச்சிகளை உருவாக்குவதற்குப் பதில் பின்தொடர்பவர்களாகவே இருப்போம். வரலாறு வழிதொடர்பவர்களால் முன்தள்ளப் படுவதில்லை. எமது இலக்கை வரையறை செய்து கொள்வதில் நாம் சுயப் பிரக்ஞையுடன் முடிவு செய்ய வேண்டும்.

இலக்கு என்பது நமது தேவையை ஒட்டியது. தேவை இல்லாமல் இலக்கு இல்லை. தேவையும், தேவையை அடைய உள்ள சாத்தியமான வழிகளும் அலசப்பட்டு, மிகச் சாத்தியமான வழியைக் கண்டதும் எமது இலக்கு தீர்மானிக்கப்படுகிறது. எமது துரதிஷ்டம் எமது கடந்த 40 ஆண்டுகட்கு மேலான போராட்டத்தின் பின்னரும் இன்னமும் இலக்குக் குறித்த சலனம் நிலவுவதே. இதற்குக் காரணம் சாத்தியமான வழிகள் முற்றாகவும், தெளிவாகவும் ஆராயப்பட்டு முடிவு காணப்படாததே என்று நான் நினைக்கிறேன். இப்போது நாம் அதைச் செய்ய வேண்டும் என்பது எனது கருத்து.

என்னைப் பொறுத்தவரை வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையின் பேரால் பிரிந்து செல்வதும், தனியரசு அமைப்பதுமே எமது தேவையைத் தீர்த்துக் கொள்வதற்கு நாம் செல்ல வேண்டிய இலக்கு எனக் கருதுகிறேன். இது தவறான இலக்கா? சாத்தியமற்றதா? ஏன்? அப்படியானால் சரியான இலக்கு எது? என்ற கேள்விகளுக் கூடாக மாற்றுக் கருத்துகளை முன் வைத்து விவாதிக்குமாறு கோருகிறேன். இது தெளிவில்லாமல் அப்பால் போவது என்பது 'வெறும் கதை'தான். ஒரு வேளை இந்த இலக்கு தெளிவாகிவிட்டால் நாம் எமது இலக்கை அடைவதற்கான பாதை பற்றிய பிரச்சினைக்கு வரலாம்.

பாதை என்பது சூழலை ஆராய்வதோடு சம்பந்தப்பட்டது. எவ் வழியால் போகலாம் என்ற பிரச்சினை அது. அரசு, அதன் தன்மை, அதன் பலம், பலவீனம் என்பவைகளுடனும், எமது மக்களின் மத்தியிலான அது பற்றிய பிரதிபலிப்புகள், அரசின் பிறபல

www.tamilarangam.net




ங்கள் என்பவற்றை நாம் கவனிக்க வேண்டும். அப்போது எது சாத்தியமான பாதை என நாம் தீர்மானிக்க முடியும். நடப்பிலுள்ள இரண்டு பழைய பாதைகளை ஒபபிட்டும் இதை நாம் அணுகலாம். புதிய பாதைகளை நாம் அலசலாம். நடப்பிலுள்ள பாதைகளில் ஒன்று சமாதானமான பேச்சுவார்த்தைகள், பிற நிர்ப்பந்தங்கள் என்பவைகளை உள்ளடக்கியது. இதன் பிதாமகர்கள் த.வி.கூ.வினர். பிறிதொன்று ஆயுதப் போராட்ட வழியினூடாகச் செல்வது. இது குறித்துப் பெரியளவில் விவாதத்திற்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை. பொதுவாக மூன்றாவது நிலையில் உள்ளவர்கள் – விரக்தியின் விளிம்புக்குச் சென்றவர்களை விட்டால், – ஆயுதப் போராட்டத்தை வலியுறுத்துவதாகவே நினைக்கின்றேன். ஆனால் பலரும் மறந்துவிடுகிற விடயம் 'ஆயுதப் போராட்டம்' ஒரு போராட்ட வடிவமே அல்லாமல் அது ஒரு பாதை அல்ல என்பது. பாதை என்பது பல்வேறு போராட்ட வடிவங்களை உள்ளடக்கியதாக அமையலாம். உரிய போராட்ட வடிவங்கள் உரிய நேரத்தில் கையாளப்படா விட்டால் போராட்டப் பாதையே திசைமாறிவிட வாய்ப்பு உண்டு!

ஆக, பாதை என்பது என்ன?

ஒரு காட்டில் பாதையை அமைக்க கல்லு, முள்ளு, புல், பூச்சி என்பவற்றை இனங்கண்டு வேண்டிய வழிமுறைகளில் அவற்றை அணுகுவது போலவே இதுவும் எதிரி, நண்பன், எதிரியின் நண்பன், நண்பனின் எதிரி, நண்பனின் நண்பன், எதிரியின் எதிரி என்று அனைத்தையும் இனங்கண்டு எமது இலக்கை நோக்கி நகர்தலில் இவர்களைக் கையாளுவதாகும். காடொன்றில் பாதை அமைப்பது போல இது இலகுவானதல்ல. இயங்கிக் கொண்டும் இருக்கும். சமூக இயக்கத்துடன் இச் சக்திகளும் மாறிக் கொண்டிருக்கும். இவற்றை அவதானமாகக் கணிப்பிட்டு எமது பாதையை, போராட்ட வழிமுறையை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும்.

ஆக, யார் எமது எதிரி, யார் நண்பர்... இந்தச் சக்திகள் பற்றிய மதிப்பீடு இப்போது கேள்வியாகிறது.

இலங்கை பௌத்த சிங்கள பேரினவாத அரசு எமது எதிரி. சிங்கள, முஸ்லீம், இந்திய மக்கள் எமது நண்பர்கள். குறிப்பாக முஸ்லீம் மக்கள் எம்முடன் இறுதிவரை நின்று போராடக் கூடிய நண்பர்கள். ஏகாதிபத்தியங்கள், பிராந்திய வல்லரசுக்கள் எமது எதிரிகள் – எதிரியின் நண்பர்கள்.

இங்கே வேறு சில கேள்விகள் எழலாம். கடந்த சில காலங்களாக பத்திரிகைகளிலே விவாதிக்க

ப்படுகிற ஒரு கேள்வி: 'புலிகள் தமிழ் மக்களின் எதிரிகளா?'

இந்த நேரடி அர்த்தத்தில் இல்லை என்றே நான் கருதுகிறேன். இது பற்றி நிறைய விவாதிக்கப் பட்டுள்ளன. ஆயினும் அது முடிவினை நெருங்கிச் சென்றுள்ளதாகக் கூற முடியாது. இது பற்றியும் - புலிகள் தமிழ் மக்களின் எதிரிகளா? எதிரிகளாயின் அவர்களை எப்படி முறியடிப்பது? என்ற கேள்விகளுக் கூடாக - மாற்றுக் கருத்துகளை முன்வைத்து விவாதிக்கக் கோருகிறேன்.

இலக்கும் சரி, பாதையும் சரி என்றால் போராட்டத்தை நடத்துவது யார் என்ற பிரச்சினை வருகிறது. மக்களின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளா? உணர்வுகொண்ட இளைஞர்களா? புத்திஜீவிகளா? கலைஞர்களா? யார்..?

இவையும் முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகள். மக்கள்தான் போராடுவது என்று பொதுப்படையான கருத்தை யாரும் சில வேளை சொல்லிவிடக் கூடும். அப்படியானால் எந்த மக்கள்? யார் தலைமை ஏற்பது? அவர்களை இணைக்கும் வடிவங்கள் என்ன? அவற்றைச் செய்வது யார்? இந்தக் கடமை யாரிடம் இருக்கிறது?

மக்களின் முன்னணிப் படையை-தலைமையை- உருவாக்கும் பொறுப்பு இன்று புத்திஜீவிகளிடம் இருப்பதாகவே நான் கருதுகிறேன். இது பற்றியும் - புத்திஜீவிகளால் முடியாதா? அப்படியானால் யாரால், எப்படி முடியும்? போன்ற கேள்விகளுக்கூடாக - மாற்றுக் கருத்துகளை வைத்து விவாதிக்கக் கோருகிறேன்.

தலைமைப் பொறுப்பு தொழிலாள வர்க்கத்திடம் இருக்கிறது என்ற கோட்பாட்டுப் பிரச்சினையை அல்ல நான் இங்கே குறிப்பிடுகிறேன் என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டுகிறேன். இது எந்த வர்க்கம் தலைமை தாங்குவது என்ற பிரச்சினையல்ல, யார் இப் பிரச்சினை கட்கு வடிவம் கொடுப்பது என்ற நடைமுறைப் பிரச்சினையாகும்.

ஒருவேளை இவை அனைத்தும் தீர்மானிக்கப் பட்டுவிட்டால், இவற்றை எப்படிச் செய்வது என்கிற பிரச்சினை இவை ஒவ்வொன்றிலும் எழவிருக்கிறது.

ஆனால் அவற்றைத் தீர்மானிப்பதற்கு நான் மேற் கூறியவற்றில் பரவலான, அக்கறையுடனான விவாதம் வேண்டும். இவ் விவாதத்தில் மனிதம், சமர், தேடல், தூண்டில், உயிர்ப்பு போன்ற பத்திரிகைகளையும் - வேறு சில எனக்குத் தெரியாமல் விடுபட்டுப் போயிருக்கலாம் - அரசியற் குழுக்களையும் பங்குகொள்ளுமாறு கோருகிறேன். இது ஒரு ஐக்கியப்பட்ட முடிவினை நோக்கி எம்மை இட்டுச் செல்லும் என நான் நம்புகின்றேன்.

- வே.இளஞ்செல்வம்
(ஈழம்)




www.tamilarangam.net

# குண்டுச் சத்த சங்கீதம்

- எம்.எல்.எம். அன்ஸார் (ஈழம்)

நீ முகாமில் இன்றும்.
சாம்பலான குடிலில் ஜனாஸாவாய்க் கணவன்.
அழுகிறாய்,
சோகங்களால் உருகி கண்ணீரில் கரைகிறாய்.
இன்னும்
குழந்தையின் ஓலம்
குடலுக்குள் ஈயத்தை காய்ச்சி ஊற்றுகிறது.
முழுதும் இழந்து நீ.



உனது இன்றின் வாழ்க்கை
அது
நெருப்பில் கொதிக்கிற திரவமாக உன்னிடத்தில்
குந்திக் கிடக்கிறாய் வெந்து.
ஏக்கங்கள் உன்னைச் சுற்றி மொய்க்கின்றன.
விழிகளில்
அழுகையின் வற்றாத ஈரம் இன்னும்.

இரவின் உனது நிம்மதி
கொலை வெறியனால் நெரிக்கப்பட்டது.
குடும்பம்
வாழ்க்கை
இன்பம்
அவை இழந்து முகாமில் நீ.
நீ மட்டும் தனியே.
கையில் பிரிய மழலை.

அது பாலை உச்சரிக்கிறது.
நீ
தாலாட்டை இசைத்து தூக்கம் கொடுக்கிறாய்.
இன்னும் எத்தனை நாளைக்கு?
இன்னும்?

ஒரு நட்சத்திரத்தைப் போல தொலைவில்
எதிர்பார்ப்புகள்.
வா! முகாமுக்கு வெளியே.
மடியின் மெத்தையில் கிடக்கிற
உனது குழந்தையை எடுத்து.

பழக்கு;
நெருஞ்சிக் காட்டுக்குள் வெறுமனே நடக்க.
குண்டுச் சத்தங்களை சங்கீதமாய்ப் புகட்டு,
இடுப்பிலே கிரனைட்டுகள்.
விளையாடக் கையில் இயந்திரத் துப்பாக்கி.
இப்போது
உனது நிம்மதி அழித்தவனை அறிமுகப்படுத்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்வை

# மறையாத மறுபாதி

புகலிடக் கருத்திலக்கிய வெளியீடான 'மறையாத மறுபாதி' எனும் கவிதைத் தொகுதி வெவ்வேறு ஐரோப்பிய சஞ்சிகைகளில் 1989-92 காலப் பகுதியில் வெளிவந்த கவிதைகள் உட்பட புகலிடப் பெண்களின் 48 கவிதைகளைக் கொண்டுள்ளது. 1986இல் யாழ். பெண்கள் ஆய்வு வட்டத்தினர் 'சொல்லாத சேதிகள்' எனும் கவிதைத் தொகுதி வெளியீட்டின் மூலம் பெண்களின் ஆக்கங்களைப் பதிப்பிக்கும் பணியை ஆரம்பித்தனர். எனினும் நாட்டு நிலமை காரணமாக அப் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டபோதும், புலம் பெயர்ந்த இலக்கிய ஆர்வலர்களால் இப் பணி தொடரப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இவ்விரு கவிதைத் தொகுதிகளில் கையாளப்படும் கருப்பொருட்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமைகள் ஆறு வருட கால இடைவெளியோ, ஏழு கடல் தொலைவோ எமது வாழ்வின் போக்கில் பெரிய மாற்றமெதையும் கொண்டு வராததை உணர்த்துகின்றன. மேலும் நாம் புலம் பெயர்ந்த பின் தாய்நாட்டுச் சமூகத்தில், வாழ்வில், நடைமுறையில் ஏற்பட்ட மாற்றங்கள் எம்மை எட்டாமல், நாம் இன்னும் நாம் அறிந்த பழைய வாழ்முறையை இங்கு இறுக்கிப் பின்பற்ற விழைகிறோம். இது ஒருவகையில் எமது அடையாளத்தைப் பாதுகாக்கும் இயல்பூக்கத்தின் விளைவு எனலாம். எனினும் இது நடைமுறைப்படுத்தப்(திணிக்கப்) படுவது பெண்கள் மீதே என்றால் மிகையாகாது. நல்லெண்ணெய் சடங்குகளும், அம்மியும், தாலியும் பெண்களை இங்கும் சிறைப்படுத்துகின்றன.

*" புனிதமாய் நீராட்டி*
*ஊரெல்லாம் பறைசாற்றி*
*பக்குவமாய்ப் படம் பிடிச்சுப்*
*பார்த்து மகிழலாம்"* [1]

எனப் *"பன்னிரண்டை நான் தாண்டு கையில்... விளம்பர நீராட்டு விழா"* [2] வைக்கும் பெற்றோரும்,

*"மஞ்சள் கயிற்றில் தங்கப் பதக்கம்*
*நெஞ்சைத் தொட்டது*
*அடக்கத்திற்குப் பாராட்டென..."* [3]

பூரித்துப் போகும் மகள்மாரும் இங்கும் ஏராளம்.

சடங்குகள் மட்டுமா இங்கு எம்மைப் பின் தொடர்ந்து வந்திருக்கின்றன, இல்லை! அந்நியச் செலாவணியில் வீங்கிப் போன *சீதனமும்* தான்.

*"பூமியை விட்டு நாம்*
*செவ்வாயில் வாழச் சென்றால்*
*சூரியனையும், சந்திரனையும்*
*சீதனமாய்க் கேட்பீரோ?"* [4]

இவை எல்லாவற்றிற்கும் மேலாக எம் சமூகத்தில் ஆண்-பெண் பிள்ளைகள் பாராபட்சமாக வளர்க்கப்படுவது பெண்பிள்ளைகளின் மனதில் ஆறாத வடுக்களைத் தோற்றுவிக்கிறது. *"அம்மா, தம்பியை மட்டும் வெளியே போக, படிக்க, விளையாட அனுமதிக்கிறாய். ஏன் எனக்கு மட்டும் மறுக்கிறாய்?"* [5]

என்ற கேள்வியும்,

*"லொவி மரத்தில்*
*ஏறிக் கொள்ளவும்,*
*நல்ல பழங்களைப் பிடுங்கியுண்ணவும்*
*இனி எனக்கு விலக்கப்பட்டுள்ளதாம்.*
*நான் இனி வளர்ந்த பெண்ணாம்"* [6]

என்ற ஆதங்கமும் இதன் பிம்பங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவற்றைவிட குடும்பப் பொறுப்பு, வீட்டு வேலை என்ற பாரிய பழுவைச் சும க்கும் பெண்களின் பங்களிப்புகள் கணக்கற் றுப் போவதும், இப் பழுவின் கனம் அவ ர்களின் அறிவு, ஆளுமையை வளர்க்க முடி யாதபடி அவர்களது நேரத்தைக் கொள் ளையடிப்பதும் எரிச்சலூட்டுவது:

"நாங்களும் முழுநாள் வேலைசெய்கிறோம்
ஓய்வே இல்லை
யாரும் கவனிக்கா விடயங்களாக
எங்கள் சம்பளமும், எங்கள் மகிழ்வும்
............
ஓ! பெண்களே
ஆண்களின் பார்வையில்
மூடர்களே..." [7]

பெரும்பாலான கவிதைகள் பெண்களின் பார்வையிலிருந்து எழுதப்பட்டதாக இருந் தாலும், `ஒரு சத்தியம்` என்ற கவிதை சமூகத்தில் தன் இடம் பற்றிய ஒரு சிந்த னையாகவும் அமைந்திருக்கிறது:

" யார் நான்?
கொட்டிலில்
நிற்கும் கடாவுக்கும்...?
நான்: கடா... சீ.." [8]

இக் கவிஞரது கவிதைகள் சமூகத்தி ல் நிலவும் பால், வர்க்க பேதங்களை மாற்ற இருபாலாரும் இணைந்து போரா டுவதைச் சித்தரிக்கின்றன.

## கவிதைத் தொகுதி தரும் பிரதான செய்தி:

பெண்களைச் சிறைப்படுத்தும் பாராபட் சங்களை, மௌடீகச் சடங்கு, சம்பிரதாய, மதக், கோட்பாட்டு ரீதியான கட்டுப்பாடுக ளைத் தொட்டுக் காட்டுவதுடன் மட்டும் இக் கவிதைத் தொகுதி நின்றுவிடவில் லை. இவற்றைப் பெண்கள் இனங்கண்டு கொள்ள வேண்டியதன் அவசியத்தையும், அவற்றை ஒன்றிணைந்து எதிர்க்க வேண் டியதையும் கூடவே வலியுறுத்துகின்றன. சிறைகளை உடைத்தெறிந்து விட்டு வெளி யே வரும்படி இவை அறைகூவி அழைக்கி ன்றன.

"வறண்டுபோன அதட்டல்களையும், நொருங்கிப் போன கட்டளைகளையும் நிறைவேற்றும் மனிதப் பிணமாக வாழா மல்.." [9],

"அர்த்தமற்ற கண்ணீரை
நிறுத்திவிட்டு
புதிய பார்வையுடன்
வாழ்வை அர்த்தப்படுத்துவோம்" [10].

## வேறுபட்ட கருப்பொருட்கள்:

மேற்குறிப்பிட்ட விடயங்களைவிட, தாய்நாட்டின் /புகலிட வாழ்வின் ஏனைய அம்சங்களும் இத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. அவையாவன:

- புகலிடத்தில் வளர்ந்து வாழ்வை வேறு கண்ணோட்டத்தில் பார்க்கும் புகலிட இர ண்டாம் தலைமுறைக்கும், தாம் தாய்நாட் டில் வளர்ந்த நடைமுறையை இங்கும் பின் பற்ற முனையும் புகலிட முதலாம் சந்ததிக் கும் இடையிலான முரண்பாடு.

- அகதி வாழ்வு தந்த தாழ்வு மனப்பான் மையும், தாய்நாட்டை விட்டு வந்த குற்ற வுணர்வும்.

- தாய்நாட்டில் இழந்துபோன வாழ்வு.

" நீர் வற்றிய குட்டிக் கிணறு, குரும்பட் டித் தேரிழுக்கக் காத்திருக்கும்..." [11]

" இணல்வாடி மரத்தடியில் முள்ளைக் கால் கஞ்ன்றி வெளிச்சத்துக்காக உச்சி மரத் தை அண்ணாந்து பார்க்கும் வேப்பம் விதைகள்..."[12]

" அந்த நிலவும், கதை சொல்லும் காற்று ம் இழந்தவைதானா?"[13]

- யுத்தமும், போராட்டமும் வாழ்வில் ஏற் படுத்திய அவலம்.

- மேனாட்டு நாகரிகத்திலுள்ள நல்ல அம் சங்களை உள்வாங்காமல், புற நாகரிகத் தைப் பின்பற்றும் எமது மேலோட்ட வாழ்வு.

- புகல் நாட்டின் இயற்கை வனப்பு, கால



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலை-அழகும், கொடூரமும், அதேவேளை செயற்கை வனப்புகள் இயற்கையை மறைக்கும் துயரமும்.
*" மின் விளக்குத்தான் நிலவை மறைத்தது"*[14].

- முற்போக்குப் பேசித் தம் தனி வாழ்வில் வித்தியாசமாக நடக்கும் போலி எழுத்தாளர்கள்.

மேலும் கவிதைகளில் சொல்லப்படாத புகலிட வாழ்வின் பதிவுகள் முன்னுரையில் லஷ்மியால் அழகாகக் கூறப்பட்டுள்ளன.

பெண்களது இரண்டாந்தர நிலைக்கு முக்கிய காரணமாய் அமைவது அவர்களது கல்வி-பொதறிவு அகலிக்காததும், பொருளாதாரச் சுதந்திரமின்மையும் ஆகும். தடைகளை உடைத்தெறியப் பெண்கள் தயங்குவதற்கான முக்கிய காரணம் அதன் பின் அவர்களது வாழ்வை அமைத்துக் கொள்வதற்கான மூலவளங்களை (தொழில் வாய்ப்பு, அதற்குத் தேவையான கல்வி-மொழியறிவு) அவர்கள் விருத்தி செய்யாமல் விட்டமையே. பொருளாதார சுதந்திரமும், விழிப்புணர்வும், அறிவும் கொண்ட பெண்களை அடிமைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகும். இந்த அம்சங்களை இத் தொகுதி **பிரதிபலிக்கவில்லை** என்றே தோன்றுகிறது. எல்லாவற்றையும் ஒரு சிறு தொகுதியில் பிரதிபலித்தல் நடைமுறைச் சாத்தியமற்றதுதான். அந்த வகையில் பெண்கள் எதிர்கொள்ளும் **பிரச்சினைகளை** முன்வைப்பதில் **(தீர்வுகளை அல்ல)** இத் தொகுதி வெற்றி கண்டுள்ளது எனலாம். எனினும் சொல்லப்பட்ட விடயங்களின் கனதி காரணமாகவோ என்னவோ பல கவிதைகளில் **கோஷப்பாங்கு** விரவி நிற்கிறது.

## *<u>பெண் இலக்கியமும், விமர்சனமும்: சில கேள்விகள்</u>*

தமிழிலக்கியத்தின் நூற்றாண்டு வரலாற்றில் பெண்ணிலக்கியம் என்று குறிப்பிட கையளவு ஆக்கங்களே காணப்படுகின்றன. (அடக்குமுறைக் கலாச்சாரத்தைக் கட்டிக் காக்கும் பெண் எழுத்தாளர்களை இங்கு உள்ளடக்கவில்லை). பெண் இலக்கியப் பதிப்பகங்களோ ஒரு கைவிரல்களுக்குள் அடங்கி விடுகின்றன. சமூகத்தில் பெண் படைப்பாளிகள் எதிர்கொள்ளும் தடைகளோ ஏராளம்.

இத்தகு தடைகளினூடு வெளிவரும் பெண் இலக்கியங்களை மதிப்பிட எத்தகு அளவுகோல்கள் பாவிக்கப்பட வேண்டும்? நூற்றாண்டுக்கு மேற்பட்ட இலக்கிய அநுபவமும், எண்ணிக்கையில் பல்லாயிரம் மடங்கு கூடியதுமான ஆணிலக்கியத்தை விமர்சிக்கும் அதே அளவுகோலால் பெண் இலக்கியத்தை விமர்சித்தல் நியாயமானதா? அல்லவெனில் எத்தகு தரப்படுத்தல் அறிமுகம் செய்யப்படல் வேண்டும்? தரப்படுத்தலால் தரம் குறைந்த ஆக்கங்கள் அங்கீகரிக்கப்படும் நிலை ஏற்படுமா?

பெண் இலக்கியக் கதைப் பொருட்களோ அவர்களது வாழ்வின் மையப் பிரச்சினைகள் - சமூகத்தில் அவர்களது இரண்டாந்தர நிலை, கலாச்சாரத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள படம், அவர்களால் நிச்சயிக்க முடியாமல் போகும் அவர்களது வாழ்வு, உடல், பிள்ளைப்பேறு - இன்னோரன்னவை.

ஆண் இலக்கிய கர்த்தாக்களுக்கும், விமர்சகர்களுக்கும் இவை பொதுவில் அந்நியமானவை. (விதிவிலக்கான சிறு பத்திரிகைச் சூழல் இங்கு கருத்தில் கொள்ளப்படவில்லை); கணக்கெடுக்குமளவிற்கு முக்கியமான கதைப் பொருட்களுமல்ல. இதன் விளைவாக பெண்ணிலக்கியங்கள் 'கண்ணீர் இழப்பிகள்' என்றோ அல்லது கோஷங்கள் என்றோ இரு அதீத வரையறைகளுக்குள் அடக்கப்படுகின்றன.

பெண்ணிலக்கியத்தின் பரிமாணங்களைப் புரிந்து கொண்டுள்ள பெண் விமர்சகர்களுக்கு முன் எழும் பிரதான கேள்வி: எந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த அளவீட்டைப் பெண் இலக்கிய மதிப்பீட்டிற்குப் பயன்படுத்துவது? இது குறித்த கருத்துப் பரிமாறல்கள் இடம்பெறுவது அவசியம்.

இறுதியாக, சித்ரலேகாவின் 'தமிழ் இலக்கியத்தில் பெண்கள்-சில சவால்கள்' என்ற கட்டுரையிலுள்ள பின்வரும் பொது விமர்சனத்தை பெண் எழுத்தாளர்கள் கவனத்தில் கொள்வது அவசியம்.

"... பெண் எழுத்தாளர்களில் மிகச் சிலரைத் தவிர ஏனையோர் தமது படைப்பின் பாணி, மொழிநடை, அமைப்பு ஆகிய ஆக்கம் சார்ந்த அம்சங்களில் அக்கறை காட்டுவதில்லை. எடுத்துரைப்பாங்கான மொழிநடையே கையாளப்படுகின்றது. ஒரே வகையாக அமைகிற வர்ணனைகள், உவமைகள், சொற்றொடர்கள் மீண்டும், மீண்டும் இடம்பெறுகின்றன. வெவ்வேறு பாணிகட்கு ஆண் எழுத்தாளர்கள் உதாரணம் காட்டப்படுவது போல பெண் எழுத்தாளர்கள் பேசப்படுவதில்லை. தனித்தன்மை, தனிப்பாணி குறித்து அக்கறை கொள்வோர் மிகச் சிலரே..."


– மைத்ரேயி

---

*'மறையாத மறுபாதி' வெளியீடு:*
*Exil, 27 Rue Jean Moulin,*
*92400 Courbevole, France.*

*கட்டுரையில் பயன்படுத்தப்பட்ட வரிகள் தந்தோர்: நிருபா (1,4,11), பாமினி (2), பானுபாரதி (3,12), கல்யாணி (5,9,10), மல்லிகா (6,7), கோசல்யா (8), சுகுணா (13), சா.ஜெயந்தி (14)*

---



"ஹலோ.. இஞ்ச கொழும்பிலை பிரச்சினையொண்டுமில்லை. யவ்னாவிலைதான் குண்டு போடுறாங்களாம். அது நோமல்தானே. காசு கொஞ்சம் அனுப்பு. இஞ்சை வாழ்க்கைச் செலவு கூடியிட்டுது. நீ உங்கை ராவெல்லாம் கண் முழிச்சு றெஸ்ரோறன்ற் வேலை செய்யாதை. ஜேமனியிலை இப்ப குளிர் எப்பிடி...?"

*– இன்னன்னா*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகதிகளை விரட்டும் சட்டங்கள்




அனைத்துக் கட்சிகளினதும் பலத்த ஆதரவுடன் சென்ற வருடம் நிறைவேற்றப் பட்ட புதிய அரசியல் தஞ்சச் சட்டங்கள் 01.04.1993 இலிருந்து அமுலாகவிருக்கின்றன. புதிதாக அகதிகள் ஜேர்மனிக்குள் வருவதைத் தடுப்பதற்கும், இருக்கின்ற அகதிகளுக்கு நெருக்கடிகளைக் கொடுப்பதற்காகவுமாக இயற்றப்பட்ட இச் சட்டங்களைப் பல குழுக்கள் நாடளாவிய ரீதியில் எதிர்த்தபோதிலும் எந்தவித தடங்கலும் ஏற்பட்டுவிடவில்லை. இப் புதிய சட்டங்களின் பலாபலன்களைப் பார்த்த பின் தாங்களும் இவற்றைப் பின்பற்றுவதாகப் பல ஐரோப்பிய நாடுகள் அறிவித்துள்ளன.

விரிவானதாக இல்லாமல் மிகவும் சுருக்கமான முறையில் முக்கியமான சட்ட மாற்றங்களை மட்டும் இங்கு தருகிறோம். இவை தொடர்பான மேலதிக விளக்கங்களையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள உடனடியாக உங்கள் சட்டத்தரணிகளுடனும், அகதிகள் ஆதரவுக் குழுக்களுடனும் தொடர்பு கொள்ளுங்கள்.

1. [அ]. தாய் நாட்டிலிருந்து உயிர் தப்பி வரும் அகதி ஜேர்மனிய விமான நிலையங்களில் மட்டுமே அரசியல் தஞ்சம் கோர முடியும்.

   [ஆ]. விமான நிலையத்தில் அரசியல் தஞ்சம் கோரும் அகதியிடம் உண்மையான சொந்தப் பாஸ்போட்டும், அதில் ஜேர்மனிக்கான விஸாவும் இல்லையேல் அந்த அகதி உடனடியாகவே நாடுகடத்தப்படுவார்.

   [இ]. அரசியல் தஞ்சம் கோரும் அகதி பிரயாணம் செய்த விமானம் அரசியல் தஞ்சம் வழங்கப்படும் நாடொன்றிலோ அல்லது ஜேர்மனியின் எல்லைப்புற நாடொன்றிலோ தரித்து வந்தால், அந்த நாட்டுக்கே அந்த அகதி திருப்பியனுப்பப்படுவார்.

2. [அ]. விமான நிலையத்தில் அரசியல் தஞ்சம் கோரியவர் அங்கிருந்து "கூட்டு முகாமுக்கு"(Sammel-lager) கொண்டு செல்லப்படுவார். அம் முகாமில் 6 மாதங்களுக்குள் அந்த அகதியின் அரசியல் தஞ்ச விண்ணப்பம் விசாரணைக்கு எடுக்கப்படும். அதன் முடிவு வரும் வரை அந்த அகதி அம் முகாமுக்குள்ளேயே இருக்க வேண்டும். வெளியே வரவோ, வெளியிலிருந்து யாராவது வந்து சந்திக்கவோ அனுமதியில்லை.

   [ஆ]. அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டால் அதை எதிர்த்து 7 நாட்களுக்குள் அப்பீல் செய்ய வேண்டும். இதனை ஒரு நீதிபதியே பரிசீலனை செய்வார். இதிலும் நிராகரிக்கப்பட்டால் அந்த அகதி உடனடியாக நாடுகடத்தப்படுவார்.

   [இ]. தஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதனை Bundesbeauftrag எதிர்த்தால் , அந்த அகதி கூட்டு முகாமை விட்டு வெளியேறி வழமையான அகதி முகாமில் தங்கலாம்.

3. [அ]. 1988 டிசம்பர் 31ஆம் திகதிக்குப் பின்னர் அரசியல் தஞ்சம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரிய தமிழ் அகதிகளின் தஞ்சம் நிராகரிக்கப்பட்டால், அதனை எதிர்த்து 7 நாட்களுக்குள் அப்பீல் செய்ய வேண்டும். இல்லையெனில் இந்தக் கால அவகாசம் முடிவுற்றதும் அந்த அகதி நாடுகடத்தப்படுவார்.

[ஆ]. அப்பீலும் நிராகரிக்கப்பட்டால் அத் தமிழ் அகதி வெளிநாட்டவர் அலுவலகத்தில்(Ausländer-amt) ஒரு மனுக் கொடுக்கலாம். இதனை வெளிநாட்டவர் அலுவலகம் விசாரணை செய்த பின்பு நிராகரித்தால் அந்த அகதி உடனடியாக நாடுகடத்தப்படுவார்.

4. 1988 டிசம்பர் 31 இற்கு முன்னர் அரசியல் தஞ்சம் கோரி, நிராகரிக்கப்பட்டவர்களுக்கும், தாங்களாகவே தமது அரசியல் தஞ்சத்தை வாபஸ் பெற்றவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள Aufenhaltsbefugnis விஸா பற்றிய இறுதியான முடிவு இன்னும் வெளியிடப்படவில்லை. தற்காலிகமாக இவ் விஸா தொடர்ந்து வழங்கப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும் வருகிறது. எனினும் இவ் விஸா எந் நேரத்திலும் காலாவதியாக்கப்படலாம் என்ற அபாயம் உள்ளது.

5. சட்டவிரோத நடவடிக்கைகளைக் காரணம் காட்டி அகதிகளை நாடுகடத்தலாம். லைசென்ஸ் இல்லாமல் கார் ஓடிய போது இரண்டு முறை பொலிஸாரால் பிடித்து எச்சரிக்கப்பட்ட துருக்கியர் ஒருவர் மூன்றாம் முறை நாடுகடத்தப்பட்ட சம்பவம் சென்ற வருட இறுதியில் நடந்தது.

6. சமூக உதவி முழுவதையும் உணவுப் பொருட்களாகவோ, வவுச்சராகவோ வழங்குதல். இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த பொக்கற் மணி ஏப்ரல் மாதத்திலிருந்து சமூக உதவிக் குறைப்பின் கீழ் மூற்றாக நிறுத்தப்படுகிறது.

7. உலகத்தில் யுத்தம் நடக்கின்ற நாடுகளின் பெயர்ப் பட்டியல் ஒன்றை அரசு தயாரித்து வருகிறது. இந்தப் பட்டியலில் இடம்பெறாத நாடுகளைச் சேர்ந்தவர்கள் விசாரிக்கப்படாமலேயே தங்கள் தாய்நாட்டுக்கு நாடுகடத்தப்படுவார்கள். அரசின் பட்டியல்களில் இடம் பெற்றுள்ள நாடுகளின் பெயர்கள் இன்னும் வெளியாகவில்லை. எனினும் அதில் யூகோஸ்லாவிய, துருக்கி நாடுகள் இடம்பெறாதது தெரிய வந்துள்ளது. யூகோஸ்லாவிய அகதிகள் தொடர்ந்து நாடுகடத்தப்பட்டு வருகிறார்கள்.

8. ஜேர்மனிக்குள் தரை மார்க்கமாக வந்து அரசியல் தஞ்சம் கோருவோர் நாடுகடத்தப்படுவார்கள்.

## ஒரு துணுக்கு!

"புதிய சட்டங்களின் பிரகாரம் வருங் காலத்தில் எந்த ஒரு அகதியும் தரைமார்க்கமாக இங்கு வர முடியாது. விமான நிலைத்திற்கும் சொந்த பாஸ்போட்டிலோ அதுவும் விஸா எடுத்தோ வரமுடியாது. அப்படியானால் எந்த வழியில்தான் ஒரு அகதி ஜேர்மனிக்குள் வரலாம்?" என்று ஒரு பத்திரிகையாளர் ஜேர்மனிய உள்நாட்டமைச்சரைக் கேட்டார்.

"தனது சொந்த நாட்டிலிருந்து பரசூட் மூலம் புறப்பட்டு இங்கு வந்து குதிக்கலாம்" என்று உள்நாட்டமைச்சர் சிரித்துக் கொண்டு பதிலளித்தார்!

## சில குறிப்புகள்

Aufenthaltsbefugnis/aufenthalts-erlaubnis விஸா வைத்திருப்பவர்களில் பல தமிழர்கள் இலங்கைக்குப் போய் வருகிறார்கள். இவர்களின் பயண விபரங்கள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையில் தங்களுக்கு எதுவித பிரச்சினையும் ஏற்படவில்லை என இலங்கையிலுள்ள ஜேர்மனியத் தூதவராலயத்திலும், பிராங்பேர்ட் விமான நிலையத்திலும் கொடுக்கும் வாக்குமூலங்கள் என்பன உள்நாட்மைச்சின் கொம்பியூட்டர்களில் பதிவாகின்றன. இப்படி இலங்கைக்குப் போய் வருபவர்கள் நாடுகடத்தப்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதை எதிர்க்கின்றபோதும், ஏனைய தமிழ் அகதிகளின் அரசியல் தஞ்சத்தை நிராகரிப்பதற்கும் இத் தகவல்களும் காரணமாக அமையப் போகின்றன.

"தங்களுடைய நாட்டில் தங்களுக்கு உயிராபத்து என இங்கு ஓடிவந்து அரசியல் தஞ்சம் கோரிய தமிழர்கள், பணத்தை இங்கு சேர்த்துக்கொண்டு செல்வந்தர்களாகி தங்கள் விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க இலங்கைக்குப் போய் வருகிறார்கள்" என்று தலைப்பிடப்பட்ட செய்திகள் சுவிஸ் நாட்டுப் பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளன.

அரசியல் தஞ்சம் முடிவுறாத நிலையில் தாங்களாகவே தங்கள் தஞ்ச விண்ணப்பங்களை வாபஸ் பெறுபவர்கள் நாடுகடத்தப்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், அதை எதிர்க்கும்போது அரசியல் தஞ்சத்தைத் தாங்களாகவே வாபஸ் பெற்றமையே காரணமாகக் காட்டப்படலாம்.

## பிந்திய நெருக்கடி!

வெளிநாட்டவர்களுக்கும், அகதிகளுக்கும் தொழில் செய்ய அனுமதிப்பதை மேலும் கடினமாக்குவதற்குரிய நடைமுறைகள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. தற்போது அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தில் ஒரு அகதி வேலை தேடிக்கொள்வதை புதிய நடைமுறைகள் முற்றாகவே தடுக்கக் கூடும்.

- ஜெயா
- உருசுலா

## ஜாதி மல்லி..

[13ஆம் பக். தொடர்ச்சி]

தங்கடை சீவியத்தை நடத்துற கூட்டத்திலைதான் பாலசந்தரும் இருக்கிறார். அவற்றை பாணி கொஞ்சம் வித்தியாசம் அவ்வளவுதான். ரோஜா படத்திலை இந்திய இராணுவத்தை போராளியளாக் காட்டின மாதிரித்தான் இதிலையும் நாட்டைக் காக்கிற காவல் தெய்வங்களாய் காட்டுறார். அதோடை ஹிந்திக்காரன் சொல்லுற ஒரு வசனம் வருகுது. ஹிந்தியைப் பொது மொழியாக்கிறது ஒருதரோடை ஒருதர் தொடர்பு கொள்ளுறதுக்குத்தானாம். அதைத் திணிப்பாப் பாக்கப்படாதாம்"

"டேய் என்னடா தனிய நிண்டு கதைச்சுக் கொண்டிருக்கிறாய்?" என வெளியிலிருந்து றூம்மேற் குரல் கொடுத்தான்.

"வேதாளம், பிளீஸ் போயிடு. இன்னும் கொஞ்ச நேரம் இஞ்ச நிண்டியோ என்னை ஏத்த அம்புலன்ஸையே கொண்டு வந்திடுவான்" என்று விக்கிரமாதித்தன் கெஞ்ச, வேதாளம் வந்தவழியே மறைந்தது.

- லட்சுமணா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கள்ளர் கூட்டு

[ கலம் 54இன் தொடர்ச்சி]

1982ஆம் ஆண்டில் றீகன் போப்பைச் சந்திப்பதற்கு 3 வாரங்களுக்கு முன்னர் " இரகசிய தேசியப் பாதுகாப்புத் திட்டத்தின்" (NSDD32) ஆணைகளுக்கு இருவரும் கைச்சாத்திட்டனர். கிழக்கு ஐரோப்பாவில், சோவியத் யூனியனின் மேலாதிக்கத்தை ஒழிப்பதற்கான அரசியல், ராஜதந்திர, பொருளாதார மற்றும் இரகசிய, மறைமுக, மாறுவேட நடவடிக்கைகளே இத் திட்டங்களாகும். NSDD32இன் முக்கிய நோக்கம் போலந்து அரசை ஸ்திரமற்றதாக ஆக்குவதாகும். இதை நடைமுறைப்படுத்துவதற்கு அவர்கள் பின்வரும் வழிகளைக் கையாண்டார்கள்;

பிரச்சாரம், அமைப்புகள் வழியாக ஸொலிடர் நொஸ்கிற்கு உதவிகள், மனித உரிமைக்குத் தூண்டுகோல்கள், வழிபடுவதற்குரிய உரிமையைக் கத்தோலிக்க ஆலயங்களுக்கு கொடுத்தல், பொருளாதார ரீதியில் துன்புறுத்தல், ராஜதந்திர ரீதியில் கொம்யூனிஸ அரசுகளைத் தனிமைப்படுத்துதல் என்பவை யாகும்.

சோவியத் யூனியனில் ஜனனாயகச் சீர்திருத்தங்களை கொண்டுவர எடுக்கப்படும் முயற்சி முக்கியமானதென பிரசுரச்சாரம் செய்வதற்காக கிழக்கு ஐரோப்பாவில் இரகசிய வானொலிகளைப் பாவிப்பதென்றும் அத்துடன் றீகனின் ஏவலாளர்கள், கிழக்கைரோப்பாவில் இருக்கும் கருத்து வேறுபாடுள்ளவர்களின் நடவடிக்கைகளினால் "சோவியத் யூனியனை வெல்ல முடியாது" என்ற கருத்தை தூக்கியெறிவதென்றும் தீர்மானித்தனர்.

"போலந்தின் கொம்யூனிஸ அரசை முறியடிப்பதற்கு எவற்றைச் செய்ய முடியுமோ அவைகள் அனைத்தையும் செய்ததுடன், எதிர்ப்புரட்சிகர சக்திகளையும் பலம் பெறச் செய்தோம். அத்துடன் தேவையான தொழில்நுட்ப உதவி, இரகசியப் பத்திரிகைகள், ஒலிபரப்பு, பிரச்சாரம் என்பவற்றிற்கு பண உதவி, அமைப்புகள் பற்றிய ஆலோசனைகள் என்பவற்றையும் வழங்கினோம். போலந்தில் தொடங்கிய இவ்வாறான எதிர்ப்பை ஐரோப்பாவிலுள்ள மற்றைய கொம்யூனிஸ நாடுகளுக்கும் பரவச் செய்தோம்" என்று அமெரிக்கப் பாராளுமன்ற அங்கத்தவர் Henry Hyde கூறுகிறார்.

இராணுவப் பிரச்சினைகளுக்கு வத்திக்கானிலும் பார்க்க அமெரிக்க உளவுப் படை சிறந்தது. ஆனால் அரசியல் நிலமைகளையும், மக்களின் நிலைமையையும் மதிப்பிடுவதில் வத்திக்கான் சிறந்து விளங்கியது. ஸொலிடர் நொஸ்க்கின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமைப் பீடத்துடன் தொடர்புகளை விஸ்தரிப்பதில் தேவாலயம் முக்கிய பங்கை வகித்தது.


"பிஷப்மார் மற்றும் கத்தோலிக்க மக்களுடனும், லொலிடர்நொஸ்க்குடனும் தொடர்புகள் இருந்தமையினாலேயே போலந்து பற்றிய விபரங்கள் சிறந்த ஆதாரங்களுடன் கிடைத்தன. சிறையில் இருப்பவர்கள், லொலிடர்நொஸ்க்கின் நடவடிக்கைகள் - தேவைகள், அரசின் நடவடிக்கைகள் போன்ற இந்த விபரங்கள் ரீகனுக்கோ அல்லது கேஸிக்கோ கொடுக்கப்பட்டன. லொலிடர்நொஸ்க் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டமைக்கும், முக்கியமான நேரங்களில் கடுமையான கோரிக்கைகளை விடுக்காததற்கும் காரணம் திருச்சபையின் வழிகாட்டலே" என போப்பின் உதவியாளர் கூறுகிறார்.

போலந்து கொம்யூனிஸ நாடுகளின் நடுவில் ஓர் வெடிகுண்டாக இருந்தது. அமெரிக்காவின் ஆர்ச்பிஷப் Laghக்கும், அமெரிக்க உளவுப்படைத் தலைவர் Caseyக்கும், அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் Clarkக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் வளர்ந்தன.

லொலிடர்நொஸ்க்குக்குச் சார்பாக சர்வதேச சோசலிஸ அமைப்புகளின் உதவிகள் வளர்த்தெடுக்கப்பட்டன. 2ஆம் உலகமகாயுத்தத்திற்குப் பின் ஐரோப்பாவிலுள்ள சமூக ஜனநாயகக் கட்சிகளை சி.ஐ.ஏ கொம்யூனிஸத்திற்கு எதிராக எப்படிப் பயன்படுத்தியதோ அதேபோன்று சர்வதேச சோசலிஸ அமைப்புகளின் உதவிகள் லொலிடர்நொஸ்கிற்குக் வழங்கப்பட்டன. இவ்வுதவிகள் பிரான்ஸ், சுவீடனிலுள்ள சோசலிஸ ஆளும் கட்சி அங்கத்தவர்கள் மூலமாக போலந்துக்கு கடல் வழியாக அனுப்பி வைக்கப்பட்டன.

போலந்திலுள்ள அமெரிக்கத் தூதுவராலயம் முக்கியமான சி.ஐ.ஏ கந்தோராகச் செயற்பட்டது. அமெரிக்காவிலுள்ள தொழிற்சங்கங்களான AFL-CIO என்பன லொலிடர்நொஸ்க்கிற்காகப் பல சாதனங்களை போலந்திற்குள் சட்டவிரோதமாக் கொண்டு சென்று சேர்த்தன. சி.ஐ.ஏ லொலிடர் நொஸ்கிற்கு எதைக் கொடுக்க விரும்பியதோ அதை இந்த தொழிற்சங்கங்கள் மூலமாகக் கொடுத்தார்கள். ஏனெனில் தொழிற்சங்கங்கள் போலந்திற்குள் ஊடுருவுவது இலகுவானதாக இருந்தது.

லொலிடர்நொஸ்கிற்கு வரவேண்டிய உபகரணங்கள் கப்பல்கள் மூலம் டென்மார்க், சுவீடன் நாடுகளிலிருந்து போலந்தில் லொலிடர்நொஸ்க் அங்கத்தவர்கள் வேலை செய்யும் Gedansk துறைமுகத்திலும் ஏனைய துறைமுகங்களிலும் இரகசியமாக இறக்கப்பட்டன. இவை பின்னர் லொலிடர்நொஸ்



www.tamilarangam.net

கிற்கு ஆதரவான சாரதிகள் மூலமாகவும், பாதிரிமார்கள் மூலமாகவும் தேவாலயங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

போலந்து அரசுக்குச் சவாலாக ஆயிரக்கணக்கான புத்தகங்கள் பிரசுரிக்கப்பட்டன. நகைச்சுவைக் கதைகள், விடுகதைகள், பழங்கதைகள் எல்லாம் போலந்து ஜனாதிபதியை ஓர் போக்கிரியாக வர்ணித்தன. கத்தோலிக்க தேவாலயங்களிலும், நிலவறைகளிலும், வீடுகளிலும் மில்லியன் கணக்கான வீடியோக்களை நாட்டிற்குள் சட்டவிரோதமாககொண்டு வரப்பட்ட உபகரணங்கள் மூலம் காட்டினார்கள். சி.ஐ.ஏ கொடுத்த வானொலி உபகரணங்கள் மூலம் போலந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இடைமறித்து அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்படியான வேண்டுகோள்கள் லொலிடர்நொஸ்க்கினால் விடப்பட்டன.

"இவ்வளவு விரைவாக கொம்யூனிஸம் கவிழ்ந்து விடும் என நாங்கள் நினைக்கவில்லை" என்கிறார் போப்பின் நெருங்கிய காடினல் ஒருவர்.

87ஆம் ஆண்டு கத்தோலிக்க சபையுடன் வெளிப்படையாகப் பேசுவோம் என்று போலந்து அரசு அறிவித்த பின்தான் போலந்திற்கு எதிராக விதித்திருந்த தடைகள் நீகனால் நீக்கப்பட்டன.

88இல் கொர்பச்சேவ் வார்சோவுக்குச் சென்று, லொலிடர் நொஸ்க்கின் ஆதரவின்றி போலந்து அரசாங்கத்தால் ஆட்சி செய்ய முடியாது எனக் குறிப்பிட்டார்.

89ஆம் ஆண்டில் போலந்தில் லொலிடர் நொஸ்க்கும், ஆளும் கட்சியும் சட்டபூர்வமாகக் கையொப்பமிட்டு பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதென்று தீர்மானித்தனர்.

81ஆம் ஆண்டில் லொலிடர்நொஸ்க் தடை செய்யப்பட்டு, அதன் தலைவரான Lech Walesa கைது செய்யப்பட்ட 9 ஆண்டுகளின் பின்னர் 1990ஆம் ஆண்டில் வலேஸா போலந்தின் ஜனாதிபதியானார்.

தமிழில்: மனோ

---

*[ "புனிதக் கூட்டு" என்று தலைப்பில் 24. 2.1992ஆம் திகதிய Time சஞ்சிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கமே "கள்ளர் கூட்டு" என்று எம்மால் தலைப்பிடப்பட்டு, சுருக்கித் தரப்பட்டது - ஆ+கு ]*

---




## "ஆகவே"

* தமிழ்ச் சஞ்சிகை
* வ.சந்தா: 100,-ரூபா
* M.I.A.Jabbar
  71,Rajawarodhaya Rd
  Trincomalee

## "நந்தலாலா"

* கலையிலக்கிய இதழ்
* வ.சந்தா: 60,- ரூபா
* Nandhalala
  St. Anthony's Bu.
  481/2, Side Road
  Hatton

## "இருப்பு"

* சமூகவிலக்கிய இதழ்
* வ.சந்தா: ?
* 27, Mosque Street
  Kalmunai - 4

## "அருவி"

* ஜனரஞ்சக இதழ்
* வ.சந்தா: 96,-டி.எம்
* Aruvi Publishers
  P.O.Box: 1354
  Colombo - 1

## "தாகம்"

* கலையிலக்கிய இதழ்
* வ.சந்தா: 15,-டொலர்
* W.Michael Collin
  156, Green Road
  Trincomalee



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# கையறு நிலை !

கடைசி நாட்களைக் கசப்புடன் அனுபவித்தேன். எந் நேரமும் சோகம் ததும்புகிற நெஞ்சத்துடன், மாறா ஒரு வலி போல் உணர்ந்தேன். பிரிவு துக்கத்தை மட்டுமே அதிகம் தருகிறது. பிரிவு பிரிவாகவே கொட்டிக் கிடக்கிறது. ஊரிலோ நண்பர்கள் பிரிந்து போனார்கள். பகல் பொழுது வெறிச் சென்றே இருக்கிறது. இராப் பொழுதோ சொல்லவே வேண்டாம். சோகம் கவிந்து அழுத்திப் படுக்க வைக்கிறது. இந்த நாட்களில் இவைகளை இன்னும் கூடுதலாக உணர்கிறேன்.

மனைவியையும், பிள்ளைகளையும் பிரச்சினை தொடங்கிச் சில நாட்களிலேயே பல் ஏற்றி அனுப்பி விட்டாயிற்று. இப்போது நான் தனிய. இந்தப் பெரிய வீட்டில் ஒரு துணையுமற்று அநாதை போல நான் தனிய.

பேச்சுத் துணைக்கு ஒருவருமில்லை. ஆசிரிய நண்பர்கள் அநேகமாக ஒவ்வொருவரும் கொஞ்சம் கொஞ்சமாகக் கழண்டு விட்டார்கள். அவரவர் மனைவி, பிள்ளைகள், குடும்பம் ஊரில். அங்கு என்ன நடக்குமோ? அது நியாயம்தான்.

சூரியபாலன் போன்றோருக்கு இது நல்ல சாட்டு. வெடிச் சத்தம் கேட்டவுடனேயே வெளிக்கிட்டு விட்டார். இனி இப்போதைக்கு இங்கால் பக்கம் இல்லை. சகாதேவன் இன்னும் ஒருபடி மேல். இந்த ஊர் ஆசிரியராக இருந்தும், மனைவி, பிள்ளைகளற்றும் குண்டுச் சத்தம் கேட்ட மறுகணமே மோட்டார் சைக்கிளில் ரீ.வி, டெக்கைக் கட்டிக் கொண்டு காட்டுப் புறத்தில் ஒரு கிராமத்திற்கு ஓடி விட்டார். இது சரியோ, தவறோ என்பதல்ல; சாவகாசமாக இரு வாரங்களின் பின்னர் வந்து "ஒண்டும் நடக்கேல்லையோ? ஏன் ஸ்கூலை நடத்த வேணும்? இழுத்து மூட வேண்டியதுதானே? இதுக்கு மேலை குண்டு போட்டால் எவ்வளவு நல்லது. சும்மா உங்களுக்கு வேறை வேலை இல்லை" என்று வயித்தெரிச்சலைக் கொட்டி விட்டு பெண் ஆசிரியர்கள் உள்ள பக்கமாய்ப் போய் கதைக்கத் தொடங்கிவிட்டார். இவர் இந்த அவலமான சூழலில் எதை யோசித்திருப்பார்? தன் பணத்தை எவ்வாறு பெருக்கலாம்; தனது சகோதரனை இதைச் சாட்டாகக் கொண்டு எவ்வாறு வெளிநாட்டுக்கு அனுப்பலாம். இவர் இந்தப் பாடசாலைக் கட்டிடத்தில் குண்டு விழ வேணும் என்பதில் அக்கறையாக இருக்கிறார். இவர் என்ன மனிதனோ, இது என்ன காலமோ?

நந்தன், குமார், தர்மூ, நாதன், ஆனந்தன் இவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் மனுசர்களாக இருக்கிறார்கள். இவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நண்பர்களாகக் கிடைத்தது எவ்வளவு நல்லதாகப் போயிற்று. அல்லது இப்படியானவர்களிடம்தான் நட்பு இயல்பாக மலருமோ? எது எவ்வாறோ, தனிமையின் கொடுமையைப் போக்க இவர்கள் எவ்வளவு துணையானார்கள்.

ஆனால் இது கூடச் சில நாட்கள்தான் என்றாகி விட்டது. தனிமையின் கொடுமையைப் போக்கலாம் என்ற நிலை மாறி, பிரிவின் கொடுமையை உணர வேண்டி வந்து விட்டது.

ஆனந்தன் பாவம். மனைவி, பிள்ளைகள் திருமலையில். அங்கு என்ன நடக்குமோ? அங்கிருந்து வரும் செய்திகள் உவப்பானதாக இல்லை. தமிழர்கள் வெட்டிக் கொல்லப்படுகிறார்கள். பட்டினிச் சாவு அதிகம். வள்ளத்தில் அகதியாக ஏறி வருபவர்கள் சுடப்படுகிறார்கள். ஒரு போஸ்ற் மாஸ்ரர் தனது இரு வயதுக் குழந்தையை வள்ளத்தின் மேல் இருத்திக் கொண்டு வரும்போது சூடு பட்டு அவர் வள்ளத்தில் துடித்து விழ, குழந்தை கடலுக்குள் தவித்து இறந்தது. இது என்ன கொடுமை என்று யாரிடம் சொல்லி அழ முடியும்? எனது இரு குழந்தைகளையும் அணைக்க வேண்டும் போல இருந்தது. ஆனந்தன் ஏங்கிப் போனான்.

"எடேய் என்னடா இது?" என்று தவித்தான். "ஒன்றும் நடக்காது. நீ பயப்பிடாதை" என்று அவனைச் சும்மா தடவினேன்.

ஆயினும் அவன் குடும்பம் எப்பிடியோ உருக்குலைந்து வந்தார்கள். நீண்ட தூரம் காட்டுவழியே நடையாக நடந்து மீண்டார்கள். கையைப் பற்றினேன்.



"சந்தோசம்" என்றான். ஒடுங்கிப் போன அவன் முகம் மலர்ந்து பிரகாசித்தது. "அம்முக் குட்டி" என்று மகளை இழுத்துத் தூக்கினான். அவர்கள் தங்கள் அனுபவங்களை விபரிக்க, பிறகு "அப்படியா?" என்று கேட்டு, தனித்துப் போன வீடு போனேன்.

ஆனந்தன் குடும்பம் வருவதற்கு முன்னர் தான் ஆனந்தனும், குமாரும் முரண்டு பிடித்தனர். இருவரும் நல்லவர்கள் என்ற போதிலும் சிறு பொறி பெரு நெருப்பாகி விட்டது.

"நீ இவ்வளவுதான் என்டாப் பிறகு, இந்த பிரண்ட்ஷிப்பைப் புரியாத உன்னோடை, என்னை இவ்வளவு கேவலமாய் நினைக்கிற உன்னோடை கதைக்காமல் இருக்கிறது பெரிய நஷ்டமில்லை" என்றான் ஆனந்தன்.

"எனக்கும் அப்பிடித் தான் படுது" என்று ஒரு வசனத்தில் முடித்தான் குமார்.

நான் இடையில் திகைத்துப் போனேன். ஒன்றுமல்ல; சின்னப் பிரச்சினை. "என்னடாப்பா" என்று தனித் தனியே இருவரிடமும் கதைத்தேன். "அவ்வளவுதான்" என்று இருவரும் சொன்னார்கள்.

பிரிவு கொடுமையானது. நான் தவித்துப் போனேன். குமார் என்றால் ஆனந்தன் இல்லை. ஆனந்தன் என்றால் குமார் இல்லை. ஆனந்தன் இன்னும் ஒதுங்கிப் போனான். திருமலைச் செய்திகள் அவனைப் பாதித்தது. குடும்பம் வந்த பிறகு கொஞ்சம் மலர்ந்தான். ஆயினும் என்ன, அவன் குமாருடன் ஒட்ட விரும்பவில்லை. சில நாட்களில் தனது குடும்பத்

www.tamilarangam.net



தையும் கூட்டிக் கொண்டு யாழ்ப்பாணம் போனான்.

நான் தனிய. இதுதான் திருப்பித் திருப்பி நெஞ்சில் சுழல்கிறது. என் சுசி இல்லை. என் குட்டியன்கள் இல்லை. அம்மா, அப்பா இல்லை. அக்கா பிள்ளைகள் இல்லை. நான் தனிய. அநாதையாக, ஒரு மரத்தில் தனித்து வாழும் அணிலைப் போல என்னை உணர்கிறேன்.

குமாரும் ஓடி விட்டான். பொம்பர் பறந்து, செத்தோம் என்று நடுங்கிய அந்த இரவிற்கு அடுத்த நாள் "மச்சான் நான் ஓடப் போறன்ரா" என்று சொல்லிப் போய் விட்டான். மனைவி இல்லை. பிள்ளைகள் இல்லை. அவனை நம்பித் தாய், தகப்பன் இருக்கிறார்கள். திருமணம் ஆகாத ஒரு தமக்கையும், தங்கையும் இருக்கிறார்கள்.

அவன் இருந்தபோது பின்னேரம் அவ்வளவு குழப்பமானதாக இல்லை. மதிய நித்திரை முடித்த சற்று நேரத்திற்குப் பின், சூரியன் மேற்கில் புதைந்து. மாமரத்தின் கீற்றுக்களுக்கிடையில் மஞ்சள் வெயிலை வழிய விட்ட மாலையில் குமார் ஒழுங்கைப் புழுதி பறக்க வந்தான். வழமையாக வருவது தான். அவன் பிரியத்திற்குரியவளின் வீடு சற்று அப்பால் என்பதால் சேவியர் கடைச் சந்திக்கு முகம் கழுவி, ரீ குடிக்கப் போனோம். வழமை போலவே வெறும் ரொட்டி சாப்பிட்டு ரீ குடித்தோம். சாடையாகப் பசி அடங்கினாற் போல. இராச் சாப்பாட்டையும் கட்டினேன்.

உறுமல் சத்தம் கேட்க, அண்ணாந்து பார்த்தபோது சீ பிளேன் பலமுறை சுற்றியது. "மாப் எடுக்கிறான். நாளைக்கு வந்து அடிக்கப் போறான்" என்றார்கள். கடையின் வாசலில் ஒதுங்கி நின்றோம். இருட்டிவிட சீ பிளேன் போய் விட்டது.

குமாரை விடப் போனேன். கரடிப் போக்குச் சந்தியில் நின்று கதைத்துக் கொண்டிருந்தபோது திடீரென இரைந்து கொண்டு பொம்பர் வந்தது. இருட்டில் பொம்பரைத் தெரியவில்லை.

"டேய் பொம்பர் வந்திட்டுதடா"

"என்ன செய்யலாம்?"

"பாப்பம் நிண்டு"

தூரத்தில் குண்டு விழுந்து நகரம் பனிச்சிட வெடித்தது.

இருந்தாற் போல தலைக்கு மேல் பொம்பர். குண்டு சிவப்புக் கனலாகச் சீறியது.

"விழுந்து படடா" என்று விழுந்து குப்புறப் படுத்தேன். சுசியும், குட்டியன்களும் அநாதையாவார்களோ? அம்மா, அப்பா தம் மகன் இல்லாது தவிப்பார்களோ? அக்கா தம்பி இழந்து கலங்குவாரோ?

ஐம்பது யாரும் இல்லை. விழுந்து பனிச்சிட வெடித்தது. தலைக்கு மேலால் செல்லின் செதில்கள் சீவிக் கொண்டு பறந்தன. சின்னக் கற்கள் எங்கள் மேல் பட்டன. எலக்ரிசிற்றி வயர்கள் அறுந்தன. சைக்கிளை எடுத்துக் கொண்டு கண் மண் தெரியாமல் ஓடினோம். வீடு வந்து சேர்ந்தோம்.

மறுநாள் குமார், "மச்சான் நான் ஓடப் போறன்ரா" என்று சொல்லிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போய் விட்டான்.

இன்னமும் நான் தனித்துப் போனேன். நான் எதற்காக இங்கு நிற்கிறேன்? நான் ஏன் ஓடக் கூடாது? சுசி , பிள்ளைகள் அங்கு எப்படித் தவிப்பார்கள்? அதையெல்லாம் தவிர்த்து நான் ஏன் இங்கு நிற்க வேண்டும்? நான் கானலைத் தேடி ஒடுகிறேனா? இது கானல் தானா? அல்லது இது உண்மையா?

என்னை நம்பிச் சில மாணவர்களாவது வருகிறார்கள். `என்னை நம்பி`. அதுதான் முக்கியம். அரசியல் வேலை செய்த காலங்களிலும் எங்களை நம்பிப் பலர் வந்தார்கள். அவர்களை நான் கைவிட்டு விட்டேன். கைவிட்டு விட்டேனா? சாட்டுவேண்டாம்; காரணம் வேண்டாம். நான் கைவிட்டு விட்டேன்.

அன்று பஸ்ஸில் சென்ற போது எனக்கு நன்கு தெரிந்த, நான் மறக்க முயற்சி செய்கிற மனுசர்களில் ஒருத்தியான சறோ அக்கா,

"நீங்கள் டேவிட் தம்பி தானே? இப்ப ஏன் அங்கால் பக்கம் வாறேல்லை?" என்று கேட்டார்.

ஒரு கணம் திகைத்தேன். அக்கம் பக்கம் பார்த்தேன். எல்லோரும் என்னைப் பார்ப்பது போல பிரமை.

"நான் டேவிட் இல்லை. நான் ரகுராம்" பொய் சொல்லி விட்டேன். உண்மையும் சொல்லி விட்டேன். இடையில் தோன்றிய டேவிட் சில வருடங்களிலேயே இறந்து விட்டான். நான் எனக்குச் சூட்டிய டேவிட்டை நானே அழித்து விட்டேன். இப்பொழுது நான் ரகுராம். அப்பா, அம்மா செல்லமாகச் சூட்டிய ரகுராம்!


நம்பவில்லை. புரியாத குழப்பமான முகத்துடன் போய் இருந்தார்.

தோழர் டேவிட்டாக இருந்த காலத்தில் எனக்குத் தாடி இருந்தது. கண்ணாடி போட்டிருந்தேன். தலையில் மயிரும் அடர்த்தியாக இருந்தது. கறுத்து மெலிந்திருந்தேன்.

சறோ அக்கா, தோழர்களுடன் நான் சென்ற போது சாமம் என்றும் பாராது புட்டு அவித்து வாழைப் பழத்துடன் தந்தவர். தனியப் போனபோது சோறு குழைத்துத் தந்தவர். சறோ அக்கா மாத்திரம் தானா?

எனது இறங்கும் இடம் வந்தபோது சறோ அக்காவிடம் சென்று,

"நான் டேவிட்தான். எப்பிடி இருக்கிறீங்கள்? மணியண்ணையைக் கேட்டதாய் சொல்லுங்கோ. ஊரிலை எல்லாரையும் கேட்டதாய் சொல்லுங்கோ" அவர் திகைத்துத் திரும்ப முன்னம் இறங்கி விட்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டேன். பல் போக எட்டி, எட்டிப் பார்த்தார்.

மணியண்ணை விவசாயி. கொம்யூனிஸ்ற் கட்சியின் விசுவாசி. எங்களை அரவணைத்தவர். கலட்டுத் தரையில், புழுதி சூழ ஒரு குடிசை வீடு. மூன்று சுத்த மற்ற. ஆரோக்கியமற்ற குழந்தைகள். அங்கு எல்லா வீடும், எல்லாக் குடும்பமும் அப்படியே எங்களை நம்பியவர்கள்.

ஏன் என் கண் கலங்குகிறது? இந்தத் துயர் அடங்க வாழ்நாள் போதாது.

இவர்களை நான் கைவிட்டு விட்டேன்தான். இப்பொழுது எனது உலகம் எது?

கிழமை நாட்களில் வரும் பாடசாலை நேரமாகிய ஆறு மணித்தியாலமா? சனி, ஞாயிறிலும் இரண்டு மூன்று மணித்தியாலம் எடுக்கிற வகுப்பா? எது எனது உலகம்? எனது மனைவி, பிள்ளைகள், அவர்களுடன் குதூகலிக்கின்ற கணங்கள், அம்மா சாப்பாடு ஊட்டி விடுகிற நேரம், அப்பா, அக்காவுடன் கதைக்கிற புதினம், அக்கா பிள்ளைகளுடன் விளையாடுகிற பொழுது... இவையா எனது உலகம்?

நோய்க் கூறு கொண்டவன் போல இருக்கிறேன். நெஞ்சில் ஒரு வலி. சதா குடைந்து,குடைந்து மன வேதனை கொடுக்கிற வலி. சீழ் கட்டின புண்ணின் வலி போல. யாவற்றையும் இழந்து போன ஒரு தவிப்பு.

இரவில் நித்திரை வருகிறதில்லை. யோசனை. கொஞ்ச நேரம் படுத்திருக்கிறேன். பாம்பு போல நெளிகிறேன். எழுந்து வெளியே வருகிறேன்.

பின் நிலாக் காலம். தெளிவான சந்திரன். சோளகம் தென்றலாக வீசுகிறது. வானம் பஞ்சுக் கூட்டத்தால் அல்லது மல்லிகைப் பூச் சிதறலால் நிறைந்திருக்கிறது. குட்டியன்களுக்கு "அம்புலிமாமா வா வா" படித்த ஞாபகம். இப்போழுது யாருக்குச் சொல்வேன்? சில மணி நேரத்திற்கு முன்னர் தான் ஹெலி வந்து சிவப்புச் சிவப்பாக நேர் கோட்டில் குண்டுகளை இறைத்து விட்டுப் போனது. வெளியில் இருந்து ஏகாந்தமாக ரசிக்க வேண்டும் போல. வேதனை வந்து மனதைப் பிழிகிறது.

நித்திரை அரை குறை. கனவு அதிகம் தொல்லை கொடுக்கிறது. வேண்டாத, விரும்பாத கனவுகள். மனைவி, பிள்ளைகள் சுகமாக இல்லை. தர்மு என்னை வெறுக்கிறான். ஆனந்தன் என்னைத் தவிர்க்கிறான். நான் நேசிக்கிற மாணவர்கள் திரும்பிப் பார்க்கிறார்களில்லை.

காலையில் பிந்தி எழுகிறேன். சீமெந்து நிலத்தில் புழுதி படர்ந்து இருக்கிறது. கழுவ வேண்டும். ரீ வைத்துக் குடிக்க அக்கறையின்மை. பாத்ரூம் போகிறேன். குட்டியன்கள் வந்து கதவைத் தட்டி "அப்பா அப்பா" என்பார்கள். `அரைகுறை`யாக எழும்ப வேண்டும். இப்பொழுது இல்லை. இங்கு ஒருவரும் இல்லை. குளிக்கும்போது சோப் தூக்கித் தரக் குட்டியன்கள் இல்லை. கதவுகளிலும், சுவர்களிலும், அத்தனை மரங்களிலும், வெறும் நிலங்களிலும், படிக்கட்டிலும், பாத்ரூம் வாசலிலும், கிணற்றடியிலும் என் குழந்தைகளின் முகங்கள். அவர்கள் குறும்பைத் தாங்கித் தூக்க ஓடி வரும் சுசியின் சிரிப்பு. எல்லாம் அற்றுப் போயிற்று.

உன் கொடியில் சுசியின் பாவாடையும், குட்டியன்களின் இரண்டு சட்டைகளும் மாத்திரமே.

*( இக் கதையின் இறுதிப் பகுதி அடுத்த தூண்டிலில்)*

– அ.ரவி (ஈழம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நூல் அறிமுகம்

# தேசம்



சோகத்தின் சுவடுகளுக்குள்
என்றோ புதைந்துவிட்ட
வரைபடம்!

மங்களம் என்ற
மணமான வார்த்தையை
வாபஸ் வாங்கிக்கொண்டு
முகாரி ஸ்பரிசங்களுக்கு
தாளலயம் தேடும்
பல்லவி!

இன்றைய நாட்களில்
கந்தகமும், பொஸ்பரசுமே
கனிவளங்கள்!

விடியல்களைத்
தொலைத்து
கழுத்துவரை புதைந்தவர்
தலையிலும்
மண் வாரிப் போட
தவம் கிடைக்கும் கைகள்!

ஏக்கமும் பெருமூச்சும்
நிறைந்துவிட்டதால்
ஓசோன் படலம்
பொத்தலாகி விட்டதாம்!

மனிதத்தை
துப்பாக்கி முனையில்
பறிகொடுத்த அகராதி!

இங்கே
வெட்டப்படுவது
அஸ்திவாரங்கள் அல்ல,
புதை குழிகள்!

ஓ! தேசமே
உன் வானத்தில்
விடிவெள்ளியைத்
தேடித் தேடியே...
செத்துப் போனோம்!!

– இளைய அப்துல்லாஹ்
(ஈழம்) –

## தடம்

* கலையிலக்கிய இதழ்
* சந்தா: ?
* 27, A.V.V. Road
  Akkaraipattu - 2

## கொந்தளிப்பு

* கலையிலக்கிய இதழ்
* சந்தா: ?
* 88/2, Danpark Rd
  Hatton

## செம்பதாகை

* சமூகவரசியலாய்வு
* சந்தா: ?
* 26/74, Waidya Rd
  Dehiwala

## பெண்ணின் குரல்

* பெண்கள் இதழ்
* சந்தா: ?
* 17, Park Ave
  Colombo - 5

## குன்றின் குரல்

* கலையிலக்கிய இதழ்
* சந்தா: ?
* 30,Pushpathana
  Mawathe
  Kandy



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்னும் கொஞ்சம் நாங்கள்....

சென்ற இதழ் வெளியிடப்பட்ட பின்னர் இரண்டு முக்கியமான இறப்புகள் நிகழ்ந்துள்ளன.

நாள்தோறும் பல பத்துப் பேர்கள் மடிந்து கொண்டிருக்கிற ஒரு தேசத்தில் இரண்டு பேருடைய இறப்புப் பற்றி அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க என்ன இருக்கிறது என்று நீங்கள் யோசிப்பது தெரிகிறது.

உண்மைதான்!

இந்த இருமாத காலத்துள் நூற்றுக்கும் அதிகமான தமிழ் மக்கள் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் கிளாலியில் மட்டும் அடுத்தடுத்து நடந்த இரண்டு சம்பவங்களில் 50க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். வான் தாக்குதல் கொன்று குவிக்க இன்னமும் தொடர்கிறது.

அப்படி இருக்க யார் இந்த இரண்டு பேர்கள்? அவர்களின் மரணத்தில் அப்படி என்ன விசேடம்?

விசேடம் இருக்கிறது! இதோ சொல்லிவிடுகிறோம்.

OO

இவர்களில் ஒருவரது மரணம் இயற்கை மரணம்.

மற்றவரது கொலை.

இருவரும் தமிழர்கள். இருவரது இறப்பும் நிகழ்ந்தது இலங்கைக்கு வெளியே. இருவரும் அரசியல்வாதிகள்.

ஒருவர் மூத்த கொம்யூனிஸ்ட்டும், `தோழர் சண்` என்று அன்பாக அழைக்கப் படுபவருமான நாகலிங்கம் சண்முகதாசன். இலங்கைக் கொம்யூனிஸ்ட்டுக் கட்சியின் தலைவர்.

மற்றவர் `புகழ் பூத்த` `புலியிஸ்ட்டும்` `கிட்டு அண்ணா` என்று அறியப்பட்டவருமான சதாசிவம் கிருஷ்ணகுமார். புலிகளின் முன்னாள் தளபதிகளில் ஒருவர்.

முன்னவர் அறுபதுகளில் நாட்டையே உலுக்கிய பல ஜனனாயக , தொழிற்சங்கப் போராட்டங்களை நடாத்திய உறுதி மிக்க கொம்யூனிஸ்ட்.

பின்னவர் எண்பதுகளில் நாட்டை மட்டுமல்ல, உலகத்தையே உலுக்கிய பல `போராட்டங்களை` நிகழ்த்திய இராணுவத் தளபதி. அவற்றில் ஒன்றுதான் ரெலோ இயக்கத்தின் மீதான மிருகத் தாக்குதல்!

OO

`தோழர் சண்`இன் அரசியல் வரலாறு ஒரு அரை நூற்றாண்டுகால வரலாறு. அவரது அரசியல், உழைக்கும் மக்கள், தொழிலாளர்களது நலன்களுக்கான போராட்ட அரசியல். இலங்கையில் மாசேதுங் சிந்தனைகளை அறிமுகம் செய்தது அவரது கட்சி. ஒரு இடதுசாரிப் பாரம்பரியத்தை உருவாக்கியது அவரது கட்சி.

அவரது இறுதிக்காலம், அவர் மிக மோசமான -- இன்னதென்று கூறமுடியாத -- முதுகெலும்பு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த காலம், அவர் எதிர்பார்த்து, நம்பி, தனது தாயாருக்கு இளமையில் தெரிவித்தது போல `சோசலிஸம் வந்து

www.tamilarangam.net

விட்ட' காலம் அல்ல! மாறாக அவர் கண் முன்னால் சோசலிஸ முகாம்கள் ஒவ்வொன்றாக தகர்ந்து கொண்டிருந்த காலம். அவரது சக தோழர்களாக இருந்தவர்களும், அவரிடமிருந்து உடைந்து சென்றவர்களும் இனவாதிகளாக, பிற்போக்காளர்களாக, சந்தர்ப்பவாதிகளாக மாறிக்கொண்டிருந்த காலம்.! எழுந்து நடக்கவோ, அதிகம் பேசவோ, படிக்கவோ முடியாதிருந்தது அவருக்கு. ஆயினும் ஆர்வமுடன் பிறர் படிக்கக் கேட்டார். சற்றும் மனந்தளராத தெளிவுடனும், நம்பிக்கையுடனும் உறுதி குலையாத ஒருவராக அவர் இருந்தார். சோவியத்தின் உடைவு, சீனச் சிதைவு எல்லாம் அவர் போட்ட கணக்கின்படி நடப்பதாக அவர் கண்டார்.

தொழிற்சங்கப் போராட்டங்கள், சாதி எதிர்ப்புப் போராட்டங்கள், பிற ஜனநாயகப் போராட்டங்கள் எல்லாவற்றிற்கும் முன்னுதாரணமாக திகழ்ந்த அவர் ஒரு சிறந்த படிப்பாளி. ஓயாத உழைப்பாளி. சிந்தனையாளர்.

அவரால் பிற எல்லாவற்றையும் சரியாகப் பார்க்க முடிந்தளவுக்கு, தனது கட்சியையும், நாட்டையும் பார்க்க முடியவில்லையோ என்ற சந்தேகம் பலரால் கிளறப்படுகிறது.

அல்லாவிடில் ஏன் இப்படி அவர் இறுதிக்காலம் மிகவும் கவலைக்கிடமானதாக அமைந்தது என்ற கேள்வி எழலாம்.

உண்மைதான். அவரது பலங்களும், பலவீனங்களும் சேர்ந்ததே அவரது அரசியல் வாழ்வு. கட்சியின் தத்துவவாதியாக, அரசியல் வழிகாட்டியாக, போராடும் தலைவனாக எல்லாமாக அவர் இருந்தார். அவரது பலமும், பலவீனமும் அதுவே. அவரது இந்த 'எல்லாமாக' இருந்தமையே அவரது நிலையை - அவரது கட்சியின் நிலையை - அவர் புரிந்துகொள்ள முடியாமல் பண்ணிற்று எனலாம்.

ஆனால் அவர் ஒரு தீவிர ஜனநாயகவாதி. மக்களின் நலனை எப்போதும் முதன்மைப்படுத்திய போராளி. நாட்டிலே ஒரு சகாப்தத்தை ஏற்படுத்திச் சென்ற செயல் வீரர்.

அவரது வாழ்வும், அரசியலும் வெறும் புகழ்தலுக்குரியதல்ல. கேள்விகட்கும், விமர்சனத்திற்கும், படிப்பினைக்கும் உரியது.

' தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் போக்குப் பற்றி அவர் இவ்வாறு எழுதினார். அறுபதுகளிலேயே ஆயுதப் போராட்டம் பற்றிப் பேசியவரும், கருவளவிலாவது நடாத்த வழிகாட்டியவருமான சண். 'பிற்போக்கு இனவாத சிங்கள அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதமேந்திப் போராட தீவிரவாதிகள் எடுத்த முடிவு சரியானது. அவர்கள் இவ்வாறு தமிழ் மக்களின் தன்மானத்தைக் காப்பாற்றி சர்வதேசக் கெரில்லாப் போராட்டத்தின் வரலாற்றில் புகழ்மிக்க அத்தியாயம் ஒன்றை எழுதினார்கள். அவர்கள் காட்டும் துணிவும், வீரமும் பாராட்டத் தக்கவை' என்று எழுதினார். ஆயினும் அவர்களது தவறை சுட்டிக்காட்டவும் அவர் தயங்கவில்லை.


'இதில் மிகவும் கடுமையான தவறு இந்தியாவில் அவர்கள் பூரணமாகத் தங்கியிருந்ததாகும். இந்தியா ஒரு புரட்சி நாடல்ல. பெரும் பூர்சுவாக்களால் ஆளப்படும் ஒரு நாடு. ஈழப் போராட்டத்தைப் பயன்படுத்தி, வங்க தேசத்தில் அவர்கள் செய்ததுபோல் இலங்கை மீது தமது மேலாதிக்கத்தை ஸ்தாபிப்பதே அவர்களுடைய விஸ்தரிப்புவாத நலன்களாகும் என்பதை இவர்கள் முற்றிலும் பொருட்படுத்தவில்லை. சகல விடுதலை இயக்கங்களும் இந்தத் தவற்றிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்...

... இரண்டாவதாக, தீவிரவாதிகள் மேம்பட்ட சக்திகட்கு எதிராக தமது சக்திகளை ஐக்கியப்படுத்த தவறிவிட்டார்கள்.

www.tamilarangam.net

சொந்தச் சக்திகளை ஐக்கியப்படுத்தி எதிரியைத் தனிமைப்படுத்துவது அடிப்படைத் தந்திரம். ஆனால் ஒரு முனை வாதம் காரணமாகவும், புரட்சிகரமற்ற குட்டி பூர்சுவா தலைவர்கள் காரணமாகவும் தீவிரவாதிகளால் இதைச் செய்ய முடியவில்லை. இதிலும் மோசமானது இயக்க மோதலாகும். இதனால் ஒருவர் பின் ஒருவராக அழிக்கும் எதிரியின் பணியை இவர்களே செய்கின்றார்கள். இது எவ்விதத்திலும் மன்னிக்க முடியாதது...

... மக்கள் யுத்த தந்திரோபாயங்களை அவர்கள் கடைப்பிடிக்கவில்லை. மேம்பட்ட சக்திகளுக்கு எதிராக சிக்கலான யுத்தம் ஒன்றில் இத் தந்திரோபாயங்கள்தான் அவர்களுக்கு வெற்றியைத் தந்திருக்கும். ஏறக்குறைய சகல தீவிரவாத ஸ்தாபனங்களும் கொள்ளை, பணப் பறிப்பு, அடித்து தாக்குதல், அச்சுறுத்தல், படுகொலை போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. அப்பாவி சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் படுகொலை செய்தது அவர்களது மோசமான குற்றமாகும். இதேவேளை இத் தீவிரவாத இயக்கங்கள் மக்களுக்கு ஆயுதமளிக்கவும், எதிரிக்கு எதிராக அவர்களைப் போராடச் செய்யவும் மறுத்துள்ளன....'



அது மட்டுமல்ல, இலங்கை- இந்திய ஒப்பந்த வேளையில் தெற்கில் இருந்து எதிர்ப்புடன் ஒலித்த ஒரே குரல் – பிற இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் மதி மயங்கி இருக்கையில் – ஆக்கிரமிப்பு என உறுதியாக உரத்துத் தெரிவித்த ஒரே குரல் சண்ணின் குரல் மட்டும்தான்!

அவரது மரணம் ஆழ்ந்த கவலை தருவது.

OO

'கிட்டு'வின் அரசியல் வாழ்வு எண்பதுகளின் முற்கூறுகளிலேயே ஆரம்பிக்கிறது.

குறிப்பாகச் சொன்னால், யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களது சம்பளப் பணம் கொள்ளையிடப்படுவதில் ஆரம்பிக்கிறது.

இதற்கு முன் ஒன்றிரண்டு தனிநபர் கொலைகள்.

கிட்டு கொல்லப்படும்போது அவரது அரசியல் வரலாறு ஒரு பத்தாண்டு காலத்தைக் கடந்திருந்தது.

அவர் வலுவேகமாகவே புலிகளின் முக்கியஸ்தர் ஆனார்.

புகழ்பெற்ற ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் மீதான தாக்குதல்கள், பிற ஈழ விடுதலை இயக்கங்கள் மீதான தடை என்பன இவரது கைங்கரியங்கள்.

பிற்காலத்தில் 'இந்திய ஏஜெண்டுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதாலேயே இவர்களைத் தாக்கியதாக `புலிகளின் சார்பில் கிட்டு கூறினார். ஆனால் அவர் ஒருபோதும் இந்திய எதிரியாக இருந்ததில்லை.

கிட்டு காலத்தில்தான் குடாநாடு சற்றேறக்குறைய `விடுதலை பெற்ற பிரதேசமாக` இருந்தது. அக் காலத்தில்தான் அடுத்தடுத்து பல சிறு முகாம்கள் ஒன்றன் பின் ஒன்றாக விழுத்தப்பட்டன. அக் காலத்தில்தான் வரி அறவீட்டு முறை முதல் முதல் அமுலுக்கு வந்தது. அக் காலத்தில்தான் சந்திகள் தோன்றும் தமிழ்நாட்டுப் பாணியிலான பெயர்களைக் கொண்ட நினைவு ஸ்தூபிகளும், சரணாலயங்களும் கட்டப்பட்டன. பகிரங்க மின்கம்பத் தண்டனைகளும் புகழ் பெற்றன.

முதன் முதலாக இராணுவத்தாருடன் `கைலுக்கிப் பேச்சுவார்த்தை` நடந்ததும் கிட்டு காலத்தில்தான்.

புகழ் பெற்ற பல கோவில் கொள்ளைகள் நடைபெற்றதும் கூட இவரது காலத்தில்தான்.

அரசியல் கூட்டங்கள் பெரியளவில் ஒழுங்கு செய்யப்பட்டதும், நடைபெற்றதும் கூட இவர் காலமேதான்!

ஆம், புலிகள் பலம் பெற்ற ஒரு அமைப்பாக வளர்ந்ததற்கு, வளர்வதற்கு கிட்டு ஆற்றிய பணிகள் ஏராளம்.

உள்வீட்டுச் சதியால் காலை இழந்த போதும், புலிகளுக்காக தன் இறுதி மூச்சுவரை இயங்கிவர் அவர்.

"இங்கு ஒரு இயக்கம்தான் இருக்க முடியும். சொந்தப் பலத்தினால் அந்த ஒன்று எது என்று தீர்மானிக்க எந்த இயக்கத்திற்கும் முடியும்" என்பது கிட்டுவின் தத்துவமாக இருந்தது.

இன்று கிட்டு கொல்லப்பட்டு விட்டார்.

00

தெற்காசிய பொலிஸ்காரன் இந்தியா சர்வதேசக் கடலில் வைத்து புலிகளின் கப்பலைத் தாக்கி, கிட்டுவைக் கொன்றுள்ளது.

இந்தியாவின் அடாவடித்தனத்தை `கிட்டு` என்பதற்காக யாராவது கண்டிக்காமல் இருக்கக்கூடும்.

ஈராக்கிற்காக வளைகுடா யுத்தத்தில் அமெரிக்காவை ஆதரித்தது போல!

கிட்டு கொல்லப்பட்டது தமிழ் மக்களுக்கு பெரிய இழப்பாக இல்லாமல் கூட இருக்கலாம்.

ஆனால், இந்த கொலைச் சம்பவம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு குறியீட்டு அர்த்தத்திலான எச்சரிக்கையாகும்.

00

சிறந்த போர்முனைத் தளபதியாக மட்டுமல்ல, அரசியல்வாதியும்தான் என நிரூபித்தவர் அவர்.

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரனின் கடத்தலைத் தொடர்ந்து நடந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் போது, தாங்கள் கொலை செய்தவனை `நாமும் சேர்ந்து தேடுகிறோம்` என ஒரு தேர்ந்த அரசியல்வாதியாக அறிவித்தவர் கிட்டு!

முன்னவரது இழப்பு எமது மக்களைப் பொறுத்தவரை, தமது விடுதலைக்காக போராடியவர் என்ற வகையில், மலை என்றால் பின்னவரதை இறகு என்று சொல்லலாமா?

www.tamilarangam.net

ாச 1993
ம்: 56

கவரி
HOONDIl
ıdasien Burc
rosse Heim Str. 58
500 Dortmund 1
ermany

தா
மாதங்களுக்கு
பாற் செலவுடன்!
ள்நாடு: 20,-டி.எம
ரோப்பா: 22,-டி.எம
ு: 28,-டி.எம்

பாற் கணக்கு இல.
08 07 468
ostscheckamt
ortmund
LZ 44o 1oo 46



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்